Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1049)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 29 புதன்கிழமை (16.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 46




ஒரே வலைப் பின்னலில் 05



உறவுகளை தொடர ஆர்வம் 07



ஈரான் மீது நடவடிக்கை 13



மோதலை ஏற்படுத்தும் அரசாங்கம் 08


## பிணை மனு நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இயங்கி வந்த சுமங்கலி விடுதியில் விபசாரம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர்கள் தமக்குப் பிணை வழங்குமாறு கோரித் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நிராகரித்தது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 3 பெண்கள், 3 ஆண்கள், விடுதி உரிமையாளர், உதவியாளர் என 8 பேரது பிணை மனுக்களுமே நிராகரிக்கப்பட்டது. (எஸ்)



ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரா ச.சிவதாசனின் பூதவுடல் கட்சியின் தலைமைப் பணிமனையில் நேற்றைய தினம் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட பெருமளவானோர் தமது அஞ்சலியைச் செலுத்தினர். இன்றும் பிற்பகல் ஒரு மணியளவில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும் பூதவுடல் பின்னர் மாவிட்டபுரம் செம்பொன் வாய்க்காலில் தகனம் செய்யப்படவுள்ளது.

## பிரதம நீதியரசர் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரதம நீதியரசர் கலாநிதி திருமதி ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான குழு நாளை யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இவர்களால் குருநகரில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் மற்றும் பருத்தித்துறையில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்ற கட்டடத் தொகுதியும் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொள்ளவுள்ளார். (எஸ்)

# ஈழத் தமிழர்களை விற்று பிழைக்கிறது கூட்டமைப்பு

## கொதிக்கிறார் மனோ கணேசன்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பானது புலம்பெயர் தமிழர்களிடம் ஈழத் தமிழர்களை விற்றுப் பிழைப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை புலம்பெயர் மக்களிடம் எடுத்துக் கூறப்போவதாகக் கூறிக் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு ரிக்கட் விற்பனை செய்து அதன மூலம் கூட்டமைப்பு பணம் கறப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு என புலம்பெயர் தமிழர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இவ்வாறு பெற்றுக்கொள்ளும் பணத்தை அவர்கள் தங்களின் பொக்கற்களிலேயே போட்டுக் கொள்கிறனர். அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் வெளிநாடு சென்றிருந்த போது அங்கு வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் 75 அமெரிக்க டொலர்களை அறவிட்டுக் கொண்டனர் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## துமிந்தவைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை வழக்கில் துமிந்த சில்வா எம்.பி.யைக் கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர முல்லேரியாவில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லேரியாவில் இடம்பெற்ற சம்பவத்தில் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளான எம்.பி.துமிந்த சில்வா சிகிச்சைகளுக்காக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளரர் என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லேரியா கொலை சம்பவம் தொடர்பில் முழுமையான சாட்சி அறிக்கை இன்று சமர்பிக்கப்பட வேண்டும் என குற்ற விசாரணை (15ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் அறிக்கைக்கு இராஜதந்திர ரீதியில் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தமை தொடர்பாக நோர்வே வெளியிட்டுள்ள சுய மதிப்பீட்டு அறிக்கைக்கு எதிராக, அரசாங்கம் இராஜதந்திர ரீதியிலான அதிருப்தியை வெளியிடத் திர்மானித்துள்ளது.

இலங்கை அமைதி முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு (15ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மின் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் 20 மெகாவற் கொள்ளவுள்ள மின்சாரத்தை தனியார் கம்பனியிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் டி.யூ.பி.யூ குணதிலக தெரிவித்துள்ளார்.

கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தடை தாண்டும் போட்டியில் ஈடுபட்டுள்ளது அரசாங்கம்



(கொழும்பு)

அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் தடைதாண்டும் போட்டியொன்றில் ஈடுபட்டுவருவதாகவும் அதில் வெற்றிவாய்ப்பு மிகக்குறைவாகவே காணப்படுவதாகவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. அரசு சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்புவதற்காக பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபாடு காட்டிவருவதாகவும் ஐ.தே.க.தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிகளின்போது ஜே.ஆர். ஜயவர்த்தன, பிரேமதாஸ,காமினி (15ஆம் பக்கம் பார்க்க)

## பிளவடைந்த நிலையில் நாடு மத, இன அடிப்படையில் பேதம்



(கொழும்பு)

நாடு தொடர்ந்தும் பிளவடைந்த நிலையில் காணப்படுவதுடன். மத மற்றும் இன அடிப்படையில் பேதங்கள் நிலவி வருவதாக முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்

இலங்கையில் சமாதான முயற்சிகளின் தோல்வி குறித்து நோர்வேயின் அறிக்கை வெளியீட்டு (15ஆம் பக்கம் பார்க்க)

# குருநகர் கடற்கரையில் கடல் அட்டைகள் பறிமுதல்



(குருநகர்)

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் றோலர் படகுகளில் கொண்டுவரப்பட்ட கடல் அட்டைகளை மீன்பிடி இலாகா அதிகாரிகள் கைப்பற்றியதன் காரணமாகூ நேற்றைய தினம் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

140 றோலர் படகுகளில் கடல் அட்டை இருந்த போதிலும் 5 படகுகளில் இருந்தே கடல் அட்டைகளை அதிகாரிகள் கைப்பற்றிச் சென்றதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் 35 றோலர் படகு உரிமையாளர்களின் தொழில் உரிமை சார் அடையாள அட்டைகளையும் அவர்கள் பறித்துச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பறிமுதல் செய்யப்படாத படகுகளில் இருந்த கடல் அட்டைகள் வழமைபோல தொழிலாளர்களால் எடுத்துச்சென்று விற்பனை செய்யப்பட்டதாகவும் ஏனைய தொழிலாளர்களால் குற்றம் சாட்டப்பட்டது.

கடல் அட்டைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்வதாகப் பரவிய செய்தியையடுத்து தொழிலாளர்கள் கடல் அட்டைகளை அவர்களின் கண்களில் படாமல் எடுத்துச்செல்ல முற்பட்டவேளை கடற்கரை வாடியில் நெரிசல் ஏற்பட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (68)

## நலிவுற்ற பாடசாலை அபிவிருத்தி தென்மராட்சி வலயத்தில் கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் 50 இற்குக் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலை அதிபர்களை இன்று நண்பகல் 12.00 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

வருகைதரும் அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மற்றும் பொருளாளர் உட்பட பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுள்ள ஊர் பெரியவர் ஒருவரையும் அழைத்து வருமாறு அவர் தெரிவித்துள்ளார். (உ-11)

## வீதி செப்பனிடல் துரிதம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியின் யாழ். நகரை அண்மித்த பகுதிகள் கடந்த சில தினங்களாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மீள்செப்பனிடப்பட்டு வருகிறது.

சத்திரத்து சந்தி, பிரதம தபாலகம் ஆகியவற்றின் முன்பாக காணப்பட்ட கிடங்குகள் தார் கலவையினால் சீர்செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் தார்க் கலவையின் ஒட்டும் தன்மை குறைவாக உலர் தன்மையாக காணப்படுவதாலும் சீராக உருளை பயன்படுத்தப் படாமையாலும் திருத்த வேலைகள் திருப்திகரமாக அமையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (54)



வேலணை மேற்கு அம்பிகைநகர் முன்பள்ளியின் குழந்தைகள் தினம் அம்பிகைநகர் முன்பள்ளியில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன், அம்பிகைநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அகிலன், சனசமூக நிலைய உப தலைவர் இந்திரகுமார் மற்றும் மகேஸ்வரி அம்மன் ஆலய தலைவர் தங்கராசு ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் அம்பிகைநகர் முன்பள்ளி மாணவர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.


## கூறுவிலை கோரல்

எமது கொத்தணியினால் அமைக்கப்படும் கட்டடத்திற்கு பின்வரும் அளவுக்கான சுருக்குக் கேற்

1. $12^1/_2{}' \times 8^1/_2{}'$ - 02
2. $10' \times 8^1/_2{}'$ - 02

புதிதாகச் செய்து பொருத்துவதற்கும், 25′ அகலமான கட்டடக் கூரைக்கான இரும்பு றஸ் - 12 செய்து பொருத்துவதற்கும் தகுதியானவர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகிறது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 21.11.2011 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

தலைவர்

வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி,

மானிப்பாய்.

(C/1087)


# சின்னஞ்சிறு செய்திகள்

## தாலிக்கொடி களவு

சங்குவேலி பகுதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து தாலிக்கொடி ஒன்று கடந்தவாரம் களவாடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தாலிக்கொடியை பறிகொடுத்தவர் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் கடமையாற்றி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரை விசாரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எப்.எஸ்)

## வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு

இந்திய வீட்டுத் திட்டத்தில் வீடு அமைக்க தெரிவுசெய்யப்பட்டு மாநகர சபையின் கட்டட அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் அதனை யாழ். பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு ஜே/87 சோனகதெரு வடக்கு கிராம அலுவலர் ரவீந்திரதாஸ் கேட்டுள்ளார். அத்துடன் வீட்டுத் திட்டத்தில் பதிவுசெய்யாத குடும்பத்தவர்கள் உடனடியாக கிராம அலுவலரின் சிபார்சுடன் யாழ். பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் காணி உறுதியுடன் சென்று பதிவை மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (105)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையினால் கிராம அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பிலான கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் சி.சி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஜே/109 கிராம அலுவலர் பிரிவின் மக்கள் பங்கேற்று கிராம அபிவிருத்தி திட்டமிடலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கேட்டுள்ளார். (எப்.எஸ்)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல் இன்று காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)


# தேசிய மர நடுகைத் திட்டம் யாழ். சோனகதெருவில் அமுல்



(யாழ்ப்பாணம்)

தேசிய மர நடுகை நிகழ்வு நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஜே/87 சோனகதெரு வடக்கு பிரிவின் கிராம அலுவலர் ரவீந்திரதாஸ் தலைமையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் அஷ்ஷேக் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக், உப அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

தேசிய மரம் நடும் நிகழ்வு 2 ஆவது வருடமாக மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலுக்கமைய நடைபெற்றுவருவதாகவும் இலங்கை பூராவும் இந்நிகழ்வு நடைபெறுவதாக அதிபர் கூறினார்.

சென்ற வருடமும் இதே போன்ற நிகழ்வு மிகவும் சிறப்பாக பிரதேச செயலக அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டு மரம் நடுகையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (105)

## தென்மராட்சியில் திடீர் சோதனை வர்த்தகர்கள் 13 பேர் சிக்கினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரி திணைக்கள பரிசோதகர்களால் சாவகச்சேரி நகரக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையில் புகையிலையால் செய்யப்பட்ட சிகரெட்டை விற்பனை செய்த 13 வர்த்தக உரிமையாளர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தகர்கள் இத்தகைய சிகரெட்டை 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குறித்த வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் 4 ஆயிரம் ரூபா வீதம் 52 ஆயிரம் ரூபா அபராதம் செலுத் துமாறும் செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (உ-11)

## காசோலை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சைக்கு யாழ்ப்பாணம் - I இல் கடமையாற்றிய இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு பரீட்சைக்கான காசோலை வழங்கப்படவிருப்பதனால் நாளை பி.ப. 3.00 மணிக்கு தேசிய அடையாள அட்டையுடன் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## வீதி அகலிப்பு குறித்து கருத்துக் கூற வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தப்பசேகரம் வீதி அகலிப்பு சம்பந்தமாக கடந்த 6 ஆம் திகதி அன்று நடைபெற்ற கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 15 நாட்களுக்குள் அத்தீர்மானம் பற்றி எழுத்துமூலமாக அறியத்தருமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கேட்டுள்ளார்.

இதேவேளை கந்தப்பசேகரம் வீதியின் வடக்குப் பக்கமாக வீதியின் மத்தியிலிருந்து 20 அடிக்கு அகலிப்பதெனவும், வீதியின் மத்தியிலிருந்து 20 அடிக்கு அப்பால் மதிலினையும் புதிய கால்வாயையும் அமைப்பதென்றும் இக்கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

## பாலியல் கல்வி தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு

ஜி.ரி.இசற் நிறுவன அனுசரணையில் யாழ். வலய ஆசிரியர்களுக்கான பாலியல் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 18, 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்கள பணிமனை அலுவலர்களினால் யாழ். வலயக் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை இக்கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக பாடசாலைகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பெயர் குறிப்பிடப்பட்ட பாடசாலை ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராசலிங்கம் அறிவித்துள்ளார். (எஸ்)

நேர்மையானவர்களாக இருந்தும் இலட்சியத்தைப் பின்பற்ற முடியவில்லை என்றால் அது தமது பலவீனத்தாலேயே ஆகும். இலட்சியத்தை அடைய இறுதிவரை போராட வேண்டும்.

- விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## திசை மறந்து செல்ல வேண்டாம்!

நோர்வேயின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலிருந்து செய்திகள் விக்கிலீக்ஸ் போல நாளுக்கு நாள் ஒவ்வொன்றாகக் கசிந்து கொண்டிருக்கிறது. அவற்றில் பின்வருமாறும் ஒரு தகவல் இருக்கிறது:

விடுதலைப் புலிகளின் தலைமை ஒரு கனவுலகத்தில் இருந்தது. அவர்கள் ஒரு அதிசயம் நிகழும் என்று நம்பினார்கள். முன்னைய சந்தர்ப்பங்களில் தப்பித்துக் கொண்டதைப் போன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீண்டும் அதிசயத்தை நிகழ்த்துவார் என்று நம்பியதாக அந்த மதிப்பீட்டு அறிக்கை கூறுகிறது.

இதே அதிசயங்களுக்குக் காத்திருத்தல் தான் இப்போதும் தொடர்கிறது. ஏதாவது அதிசயம் நிகழும்; யாராவது அற்புதம் நிகழ்த்துவார்கள் என்று காத்திருந்து பழக்கப்பட்டதன் விளைவாக, நாமே ஏதாவது முடிவு பண்ணிச் செயற்பட வேண்டும் என்று நினைப்பதற்கே சோம்பலாகிப் போனோம். இது நம்மை எங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்றால், அமெரிக்க விஜயத்தால் ஏதாவது அதிசயம் நிகழாதா அல்லது அமெரிக்காவே ஏதாவது அற்புதத்தை ஏந்தி வந்து தராதா என்று சப்புக்கொட்டிப் பார்த்திருக்கச் செய்திருக்கிறது. பழம் தானாக நழுவிப் பாலில் விழாதா என்று பார்த்திருப்பதே நம்மில் பெரும்பான்மையோரின் ஒரே அரசியல் செயற்பாடாகி விட்டிருக்கிறது.

இத்தனை காலம் நீண்ட ஒரு போரினால், இனங்களுக்கிடையே பெரியதொரு விரிசலை ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். ஒருவரையொருவர் நம்பமுடியாத வெறுப்புணர்வுகள் ஆழ வேரோடிப் போயிருக்கின்றன. நம்பிக்கையீனமும் விரக்தியுமான சூழலுக்குள்ளேயே வீழ்ந்து கிடக்கிறோம்.

இந்தப் புதைகுழியிலிருந்து வெளியே வருவதற்கான சாத்திய பூர்வ வழிகளைச் சிந்திக்காமல் உள்ளேயிருந்தபடி கோபத்திலும் வெறுப்பிலும் ரோசத்திலும் மேலும் மேலும் புதைசேற்றில் ஆழ அமிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

யதார்த்தத்தையும், இன்றைய உலகின் போக்குகளையும், உலகம் நமக்குத் தரும் சமிக்ஞைகளையும், நாமிருக்கும் நிலையையும் அறியாமல் அல்லது அறிந்துகொள்ள விரும்பாமல் எதையெதையோ வீரமாகப் பேசித் திருப்திப்பட்டுக்கொள்ள நினைக்கிறோம்.

இன்று, தனிநாட்டைப் பிரித்துக்கொள்வதற்கு, உலகிடமிருந்து எந்த ஆதரவும் இல்லை என்பது நமக்கு நன்றாகவே தெரிகிறது. ஒட்டுமொத்தமாக இந்தத் தீவிலுள்ள மக்களில் பெரும்பான்மையோரது இணக்கமின்றியதாக எந்தத் தீர்வும் உருவாகிவிடப் போவதில்லை என்பதும் விளங்குகிறது. தமிழ் மக்களின் தரப்பு இலங்கை அரசாங்கத்துடன் தான் தீர்வுக்குப் பேசியாக வேண்டும். அதற்கு ஏற்றதான சூழ்நிலையும் ஆதரவும் உள்நாட்டில் ஏற்படுவதற்கும் நாம் பாடுபட்டாக வேண்டும் என்பதெல்லாம் தான் நம் முன்னே இருக்கும் நிதர்சனங்கள். ஆனால், நாம் பேசிக் கொண்டிருப்பதென்ன? வெறும் வீர வசனங்களும், சமூகங்களை விலக்கி வைக்கும் வெறுப்புப் பேச்சுக்களுமாகவே இருக்கிறது. உலகின் ஆலோசனைகள் எவையும் கூட நம் காதில் விழுந்ததாகவே காட்டிக் கொள்வதில்லை.

நாம் யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொண்டாக வேண்டும். நம் உரிமைகளையும் அதிகாரப் பகிர்வையும் சாதித்துக்கொள்வதற்கு, வெற்றுச் சவடால்களைத் தவிர்த்து, புத்திசாதுரியமான வழிமுறைகளைத் தேடிக் கைக்கொள்ளும் திராணி பெறவேண்டும்.

சீறிப் பூச்சாண்டி காட்டுவது, பழிக்குப் பழியாவேசத்தில் விவேகமற்றுத் துடிப்பது, அரசை மிரட்டிப் பணியவைப்பதொன்றே தீர்வுக்கான மார்க்கம் என்றெல்லாம் இனியும் நடித்துக் கொண்டும் நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டும் இருக்க முடியாது.

எதையெதையோ நம்பி உணர்ச்சிகர எதிர்ப்பையே பிரதானப்படுத்திச் சீரழிந்துகொண்டிருக்க வேண்டாம். சமூகம் இருக்கும் நிலையிலிருந்து முன்னேற்றம் காணச் சாத்தியமானவற்றையெல்லாம் மெல்லப் பெற்று விரிவாக்கி மேல்நகரும் விவேகத்தைக் கொணர்வோம்.

மேலும் மேலும் மக்களை, ஆவேசத்திற்கு மடியவும் அழுந்தவும் விடவேண்டாம்.

- ஆசிரியர்

# யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை மேலும் குறையும் வாய்ப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை மேலும் குறையலாம். ஏனெனில் யாழ். மாவட்ட வாக்காளர் பட்டியலில் இருந்து 41 ஆயிரத்து 750 பேர் இந்த வருடம் நீக்கப்படவுள்ளனர்.

இந்தத் தகவலை இலங்கையின் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்வதற்காக சென்றுள்ளமையே இதற்கான காரணமாகும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 816,005 பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 485,791 ஆகக் குறைந்தது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 இல் இருந்து 6 ஆகக் குறைந்தது.

இந்த நிலையில் 41,750 வாக்காளர்கள் மீண்டும் குறைந்துள்ளமையால் மேலும் நாடாளுமன்ற உறுபபினர்களின் எண்ணிக்கை குறையக்கூடும் என்று தேர்தல் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டின் யாழ்ப்பாண வாககாளர் பட்டியலில் 16,990 பேர் புதிதாகச் சேர்ககப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கூட்டமைப்பு சொல்லுவது சரி என்றால் அவர்களுக்குப் பின்னால் சென்றிருப்போம்



(மட்டக்களப்பு)

சாதிக்க முடியாதவற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவது சரியானதும் சாத்தியமானதும் என்றிருந்தால் நாங்கள் அவர்களுக்கு பின்னால் சென்றிருப்போம். அவர்கள் கூறுவது சாத்தியமற்றது என கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஆரையம்பதியில் நடைபெற்ற தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் முன்னாள் தலைவர் ரகுவின் மூன்றாவது ஆண்டு நினைவு தினக் கூட்ட நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்து உரையாற்றிய அவர், யாழ். மேட்டு குடியினருக்கு பின்னால் சென்று எமது கிழக்கு மாகாணத்தை சீரழிக்க விரும்பவில்லை. நாங்கள் அடித்துவிரட்டப்பட்டாலும் அல்லது சுடப்பட்டாலும் ரகுவின் கொள்கையை ஒரு போதும் விடமாட்டோம். இன்று கிழக்கு மாகாணத்தில் பின் தங்கிய கிராமங்களின் கல்வியை மேம்பாடடையச் செய்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் முன்னாள் தலைவர் ரகுவை பேரினவாதிகளே கொலை செய்தனர்.

இவரை ஒரு போதும் புலிகள் கொலை செய்யவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். ரகுவின் கொலை நன்கு திட்டமிட்டு இடம்பெற்றதாகும். கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் கொள்கையை நிலைநாட்டி வெற்றிகொள்ளச் செய்த ரகு நோர்வேயில் நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தையில் பின்னணியிலிருந்து செயற்பட்டவர் எனத் தெரிவித்தார்.

# கடற்பாதுகாப்பு மாநாடு தோல்வியில் முடிவடைந்ததா?

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்டு காலியில் நடைபெற்று முடிந்த கடல் பாதுகாப்பு மாநாடு எதிர்பார்த்த விளைவுகளைக் கொடுக்கவில்லை. ஏழு முக்கிய நாடுகள் இந்த மாநாட்டைப் புறக்கணித்ததைத் தொடர்ந்து இம்மாநாடு நிர்ணயித்த இலக்குகளை எட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்படை காலி கடல்சார் பாதுகாப்பு மாநாடு என்ற பெயரில் கடந்த ஆண்டு தொடக்கம் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. நேற்று முன்தினம் இரண்டாவது கடல்சார் பாதுகாப்பு மாநாடு காலியில் உள்ள வெளிச்சவீட்டு விடுதியில் தொடங்கியது.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்குமாறு இலங்கை கடற்படை 25 நாடுகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் அழைப்பு விடுக்கப்பட்ட நாடுகளில் 18 நாடுகளே இந்த மாநாட்டுக்கு தமது பிரதி நிதிகளை அனுப்பியுள்ளன.

அவுஸ்ரேலியா, பங்களாதேஷ், கனடா, சீனா, பிரான்ஸ், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், ஜப்பான், கென்யா, மலேசியா, மாலைதீவு, மியான்மர், ஓமான், பாகிஸ்தான், கட்டார், ரஷ்யா, சிசெல்ஸ், சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, தென்கொரியா, தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய 25 நாடுகளுக்கே அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்தன.

இவற்றில் சிங்கப்பூர், சிசெல்ஸ், தாய்லாந்து, மியான்மர், தென்னாபிரிக்கா, பிரித்தானியா, கனடா ஆகிய ஏழு நாடுகளும் அழைப்பைப் புறக்கணித்துள்ளன.

அதிகார்பூர்வ அழைப்பு விடப்படாத நைஜீரியா இந்த மாநாட்டுக்கு தமது பிரதிநிதியை அனுப்பி வைத்துள்ளது.

பிரித்தானியாவும், தென்னாபிரிக்காவும் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கவும், ஆய்வுரைகளை சமர்ப்பிக்கவும் இணங்கியிருந்தன. ஆனால் கடைசி நேரத்தில் இவை மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்தன.

அத்துடன் முன்னதாக இந்தியக் கடற்படையின் உயர் தளபதி ஒருவர் கலந்து கொள்வார் என்று கூறப்பட்ட போதும் கப்டன் தரத்திலான அதிகாரி ஒருவரையே இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

அமெரிக்காவின் சார்பில் பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதி உதவிச்செயலரும், சீன கடற்படையின் பிரதி தளபதியும் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில் இந்தியா தனது சார்பில் இளநிலை அதிகாரி ஒருவரை ஆய்வுரை சமர்ப்பிக்க அனுப்பியுள்ளது இலங்கைக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

அதேவேளை, கனடா, பிரித்தானியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் 'இந்த மாநாட்டை அரசியல் காரணங்களினாலேயே புறக்கணித்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

## சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மக்களுக்கான நடமாடும் சேவை

(வவுனியா)

ஐக்கிய நாடுகள் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டமும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் இணைந்து வவுனியா பிரதேச செயலக பிரிவிற்கான நடமாடும் சேவையினை எதிர்வரும் 22 ஆம் திகதி நடத்தவுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இந்நடமாடும் சேவை காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையின் ஊடாக வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரிவு மக்கள் தங்களுடைய சட்ட ஆவணங்களான பிறப்பு சான்றிதழ், தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்தல், இறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ், காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு தொடர்பான ஆலோசனைகளும் தீர்வுகளும், இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கான இலங்கை பிறப்புச் சான்றிதழ் தொடர்பான ஆலோசனைகள், இந்தியாவில் பிறந்த குழந்தைகளுக்கான குடியுரிமை சான்றிதழ் தொடர்பான ஆலோசனைகள் போன்ற சேவைகள் நடைபெறவுள்ளன.

இந்நடமாடும் சேவையின் போது முத்திரை மற்றும் புகைப்பட செலவுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் கொள்ளை சந்தேக நபர்கள் கைது

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய மோட்டார் சைக்கிளொன்றில் பயணித்துக்கொண்டிருந்த போது இந்தச் சந்தேகநபர்கள் வவுனியா கந்தசாமி நகர் பகுதியில் நேற்று முன் தினம் முற்பகல் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்த கைக்குண்டும், கொள்ளையிடப்பட்ட சில நகைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# ஆசிரியர்களது கற்பித்தல் செயற்பாடுகள் சுதந்திரமான சிந்தனைக்கு வழிவகுக்க வேண்டும்

## நீதிபதி மா. கணேசராசா

(சாவகச்சேரி)

மாணவர்களுக்கு சிறுவயதிலே ஊட்டப்படுகின்ற கல்வியும், ஒழுக் கப் பண்புகளும் அவர்கள் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பெறுகின்ற கல்வியைவிட மிகவும் முக்கியமானதாகும் என சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி யெய்திய மாணவர்களைக் கௌர விக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள். அந்தத் தலை வர்களை உருவாக்கும் மாபெரும் பொறுப்பு ஆசிரிய சமூகத்திடமே உள்ளது. அதாவது ஆசிரிய சமூகம் தமது தொழிலின் மேன் மையை எப்போதும் போற்றிக் காத்து வரவேண்டும்.

கல்வியும், ஒழுக்கமும் எமது கண்களாக இருந்தால் பீனிக்ஸ் பறவைபோல சாம்பல் மேட்டிலிருந்து நாம் மீண்டெழ முடியும்.

கடந்த காலங்களில் எமது சமூகத்தில் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்ற பல சட்ட வல்லுநர்களும், நீதிபதிகளும் சேவையாற்றியிருக்கிறார்கள்.

எதிர்காலத்தில் அத்தகைய சட்ட வல்லுநர்களும் நீதிபதிகளும் உருவாவதற்கு ஏதுவாக நம் மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பது நம் எல்லோருடைய கடமையாகும்.

ஆசிரியர்களின் கற்றல் செயற்பாடுகள், சுதந்திரமான சிந்தனைக்கும் கற்பனைக்கும் இடமளிப்பதாக இருக்கவேண்டும் அத்தகைய கற்றல் வழி முறையை மாணவர்களுக்கு புகட்டுவது ஆசிரியர்களது கட மையாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் இ. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 2001 முதல் 2011 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியெய்திய 39 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் அதிபர்களான அ. கயிலாயப்பிள்ளை, க. அருந்தவபாலன், திருமதி சி. சிவநாதன், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-11)

## பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய சிங்காரவேலன் மணி மண்டபத்தில் சிவஸ்ரீ ந. சிவசுப்பிரமணியம் குருக்கள் அறக்கொடை நிலைய ஆதரவுடன் அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் நடாத்தப்பட்டு வந்த தேவாரப் பண்ணிசை பயிற்சி வகுப்புக்கள் விடு முறையின் பின் கடந்த 11ஆம திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் வாராந்தம் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 5.00 மணி முதல் தொடர்ந்து நடைபெறும் எனவும், இவ்வகுப்புக்களில் ஆண், பெண் இருபாலரும் பங்குபற்றிப் பயன்பெறலாமென மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## இரத்ததானமும் பரிசில் வழங்கலும்

(வடமராட்சி)

கடந்த 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடலில் மூழ்கி இறந்த ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் ஞாபகார்த்தமாக கல்லூரியின் ஏற்பாட்டில் இரத்த தானமும் பரிசில் வழங்கல் நிகழ்வும் நாளையும், நாளை மறுதினமும் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு உயிர்க்காக்கும் உன்னத பணியைச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கல்லூரி மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் எஸ். தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (116

# குடும்ப விபரப் பதிவு நடவடிக்கை பொலிஸாரினால் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குடும்ப விபரங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் மீண்டும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரினால் சேகரிக்கப்படும் குடியிருப்பாளர் விபர அட்டவணை பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76ஆவது பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 'கோண்டாவில், இணுவில் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு வீடுவீடாகச் சென்று கோப்பாய் பொலிஸாரினால் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பொலிஸாரினால் வழங்கப்பட்டு வரும் இப்படிவத்தில் பொலிஸ் பிரிவுப் பிரதேச செயலர் பிரிவு, கிராம சேவையாளர் பிரிவு, பிரதான குடியிருப்பாளர் பெயர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் பெயர், வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம், பிரதான குடியிருப்பாளருக்கான உறவு முறை என்பன ஒரு பக்கத்திலும் மறுபக்கத்தில் வீட்டு உதவியாளர் உட்பட ஏனைய குடியிருப்பாளர்களின் முழுப்பெயர், வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம், நிரந்தர முகவரி, வீட்டில் தங்குவதற்கான காரணம், பிரதான குடியிருப்பாளருக்குள்ள உறவு முறை, வீட்டில் தங்குவதற்கு எண்ணியிருக்கும் கால அளவு என்பன போன்ற விபரங்களும் அடங்கு கின்றன.

இது போன்று கோப்பாய், மானிப்பாய், தெல்லிப்பளைப் பகுதிகளிலும் பொலிஸாரினால் குடும்ப விபரங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சிறப்பாக நடைபெற்று வரும் கரைச்சி பிரதேச கலாசார விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக கலாசார விழா நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பிரதேச செயலர் நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற அன்றைய நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மற்றும் செயலக அதிகாரிகள், கல்வியாளர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றது.

3 நாட்கள் நடைபெற்று வரும் இந்நிகழ்வில் இறுதி நாளான இன்று புதன்கிழமை மாவட்ட கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும், இதில் திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த கலைஞர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-77)

# சண்டிலிப்பாய் பகுதிகளில் வலுக்குறைந்த மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

கட்டுடை, சண்டிலிப்பாய்ப் பகுதிகளில் இரவு நேரங்களில் வலுக்குறைந்த மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக இரவு ஏழு முப்பது மணி முதல் சுமார் ஒரு மணி நேரமாக இவ்வாறு வலுகுறைந்த மின்சாரமே கிடைக்கிறது எனத் தெரிவிக்கின்றனர்.

இந்த மின்சாரத்தினால் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி உள்ளிட்ட மின் உபகரணங்கள் இயக்க முடியாத நிலை உள்ளதுடன் சக்தி சேமிப்பு மின் குமிழ்கள் மட்டுமே ஒளிர்கின்றன. ஏனையவை ஒளிர்வதில்லை அல்லது மிகக் குறைந்த ஒளியுடன் ஒளிர்கின்றது. இதற்கு அதிகளவான மின்பாவனையா அல்லது மின் வழங்கும் மார்க்கங்களில் உள்ள சிக்கலா காரணம் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டறிந்து சீர்செய்ய வேண்டும் என பாவனையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5

## நீர்வேலி கலை மன்றம் நடத்தும் கலை பண்பாட்டு நிகழ்வு

(யாழ். நிருபர்)

நீர்வேலி கலைபண்பாட்டு மன்றம் நடத்தும் கலை பண்பாட்டு விழா எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நீர்வை கலை பண்பாட்டுக்கழகத்தின் "நீர்வை" மலர் வெளியீடும் "அழகொளிரும் நீர்வேலி" என்ற இறுவட்டு வெளியீடும் இடம்பெறவுள்ளது.

நீர்வைப் பதியில் கல்விப் பயிர் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரைக் கௌவித்து அவரது பெயரில் அமைக்கப்படும் அரங்கில் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

நீர்வைக் கிராமத்தின் வளர்ச்சிக்காக உழைத்த பெரியார் சிலருக்கு "நீர்வைக்குரிசில்" என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(10)





பிறக்டிக்கல் அக்சன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கான செயன்முறை வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட தேசிய தொழில் பயிலுநர் சபையின் இணைப்பாளர் சிவதாசன், உயர் தொழில்நுட்பம் பற்றி விரிவுரையாற்றுவதனையும், நிகழ்வில் கலந்து கொண்டிருப்பவர்களையும் காணலாம். (படம் : பார்த்தீபன்)

## வழக்குத் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பிரதம நீதியரசரும் அவருடைய குழுவினரும் நாளை வியாழக்கிழமை யாழ். நீதிமன்றங்களுக்கு விஜயம் செய்யவிருப்பதனால் அன்றைய தினத்திற்குரிய யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் நடைபெறவிருக்கும் வழக்குகள் யாவும் எதிர்வரும் 24ஆம் திகதி நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் என்பதை இரு பதிவாளர்களும் அறிவித்துள்ளனர்.

# முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனம் தொடர்பில் நாம் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறோம்

(யாழ்ப்பாணம்)

பின்தங்கிய பிரதேசங்களின் கல்வியை மேம்படுத்துவதில் பெற்றோர்கள் பாரிய தடைகளை எதிர்கொள்வதுடன் முன்பள்ளி ஆசிரியர்களும் குறைந்த வேதனத்துடன் சேவையாற்றி வருகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

மாதகல் காந்திஜீ முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: கடந்த முப்பது வருடத்திற்கும் மேலாக தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள் நீங்கி சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ்ந்து வரும் நிலையில் யாழ். மாவட்டத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களை தவிர ஏனைய பிரதேசங்கள் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன.



இதையுணர்ந்து இப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவும். மக்களது துன்பங்களை நீக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போதும் இவ்வாறான அபிவிருத்திகளை விரும்பாத அரசியல் சக்திகளால் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதேபோல் எமது மக்களுக்கான செயற்பாடுகளை கொச்சைப்படுத்தி எம்மீது சேறு பூசும் வகையில் சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இம்முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நியமனத்தை வழங்குவதில் நாம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம். மக்களது உரிமை தொடர்பான பிரச்சினைகள் வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்பவற்றை தீர்ப்பதற்காகவே நாம் அரசுடன் இணைந்து செயலாற்றுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டு நிகழ்வில் வெற்றியீட்டிய சிறார்களுக்கான சான்றிதழ்களை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் ஜீவா, மாதகல் காந்தீஜீ சனசமூக நிலையத் தலைவர் துரைசிங்கம் உட்பட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபை உறுப்பினருமான ஜீவா, முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி யாழ். பொது நூலக பயன்பாட்டிற்கென ஒரு தொகுதி நூல்களை மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவிடம் கையளிப்பதையும் அருகில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிற்பதையும் காணலாம்.

# உதவிப்பதிவாளர் அலுவலகங்களை ஒரே வலைப்பின்னலில் இயக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இயங்கிவரும் உதவிப்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்தும் ஒரேவலைப்பின்னலின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகங்களில் இயங்கிவரும் உதவிப்பதிவாளர் அலுவலகங்கள் ஒரேவலைப்பின்னலின் கொண்டுவரப்படும் பட்சத்தில் யாழ். மக்கள் தங்கள் பிறப்பு, இறப்பு சான்றுப்பத்திரங்களை இலகுவில் பெற்றுக்கொள்ளமுடியும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

நாடுதழுவிய ரீதியில் பதிவாளர் திணைக்களப்பணிகள் ஏற்கனவே ஒரேவலைப்பின்னலின் கீழ் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் தற்போது யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில் பிரதேசசெயலகங்களில் உள்ள உதவிப்பதிவாளர் அலுவலகங்கள் ஒரேவலைப்பின்னலின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதேபோல் மாவட்டத்தில் உள்ள ஏனைய பிரதேச செயலகங்களின் உதவிப்பதிவாளர் அலுவலகங்களின் செயற்பாடுகள் ஒரேவலைப்பின்னலின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன. என்றும் இதன் மூலம் அப்பிரதேச மக்கள் நன்மை அடைவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(16.11.2011 –புதன்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஐப்பசி 30 ஆம் நாள்.
இராகுகாலம் 12.07-1.37, சுபநேரம் 4.37 -6.07வரை
நட்சத்திரம்: புனர்பூசம் பி.ப . 2.36 வரை
திதி: பஞ்சமி காலை 6.56 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தொழில் உயர்ச்சி, வெளிநாட்டு உதவி தேகம் சுகம்.

ரிஷபம:–குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம்வரும், அதிகாரப்போட்டி, பிணக்குத் தீர்த்தல், தொழில் வெற்றி.

மிதுனம் :–பணக் கஷ்டம், நினைத்ததைச் சாதித்தல், சுற்றத்தார் ஆதரவு, சுபகாரிய பேச்சு, தேகம் சுகம்.

கடகம்:– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், தொழில் இலாபம், வாய்ப்பு இழத்தல், உடல் உபாதை.

சிம்மம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, திடீர்ப்பயணம், தேகம் சுகம், வாக்குவாதம்.

கன்னி :– குடும்பத்தில் குழப்பம், பணம்வரும், தேக நிலை பாதிப்பு, பிணக்குத்தீத்தல்.

துலாம் :–பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, திடீர்ப்பயணம், வேலைப்பழு, தேகம் சுகம்.

விருச்சிகம்:–குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம்வரும், வீணான பேச்சு, அயலார் கரைச்சல், தேகம் சுகவீனம்.

தனுசு:– பணக்கஷ்டம், வசதிக்குறைவு, சுற்றத்தார் ஆதரவு, உடல் உபாதை, மருத்துச்செலவு.

மகரம:– குடும்பத்தில் குழப்பம், பணம்வரும், திடீர்ப்பயணம், பிணக்குத் தீத்தல், தேகம் நலம்.

கும்பம் :– பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, நினைத்ததைச் சாதித்தல், தேகம் நல்லசுகம்.

மீனம் :– குடும்பத்தில் குதூகலம், பணம்வரும், தேகம் நல்லசுகம், அயலார் தொல்லை, இறைதரிசனம்.

# பாலபண்டித பரீட்சைகள் எதிர்வரும் 19இல் ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் பால பண்டித பரீட்சைகள் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

பரீட்சை நேர அட்டவணை வருமாறு 19.11.2011 காலை 9.00-12.00இலக்கணம் 1.1, மாலை 1.00-4.00 இலக்கியம் 2.2, 20.11.2011 காலை 9.00-12.00 உரைநடை இலக்கியவரலாறு 3.1, மாலை 1.00-4.00ஆங்கிலம் ,சிங்கம், சமஸ்கிருதம் 21-11.2011 காலை 9.00-12.00 இலக்கணம் 1.2, மாலை 1.00-4.00இலக்கியம் 2.1, 22.11.2011 காலை 9.00-12.00 இந்து,இஸ்லாம் 4.1, மாலை 1.00 -4.00 செய்யுள் இயற்றல் 3.2 மேற்படி பரீட்சைகள் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளன. (10)


# டெங்கு ஒழிப்பு நடவழக்கை

(வவுனியா)

மழைக்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.சத்தியநாதன் தெரிவித்தார்

வவுனியா மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு செயலணிக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இது மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபரை தலைவராகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை செயலாளராகவும் கொண்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் கிராம சேவகர்கள் உட்பட பொலிஸ் மற்றும் இராணுவத்தினரை அங்கத்தவர்களாக கொண்டுள்ளது.

பிரதேச மட்டத்திலான செயலணிக்குழு பிரதேச செயலாளரை தலைவராகவும் சுகாதார வைத்திய அதிகாரியை செயலாளராகவும் கொண்டு இயங்குமெனவும் அவர் கூறினார்.




உலக சனத்தொகை 700 கோடி என ஐக்கிய நாடுகள் சபையால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதும் என்னுடைய கணக்கு மூளைக்கு முதலில் பட்டது இந்தியாவும், சீனாவும்தான்.

ஆசியாக் கண்டத்திலே இருக்கும் இந்த இரண்டு நாடுகளுமே 200 கோடிக்கும் மேற்பட்ட சனத்தொகையைக் கொண்டதாகத் திகழ்கிறது.

இன்னும் ஆசியா மற்றும் ஐரோப்பாக் கண்டங்களில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் 500 கோடி மக்கள் மட்டுமே வாழ்கிறார்கள்.

எண்டால் சனத்தொகை பத்தாதெண்டுதான் சொல்லுவன். ஆனால் உலக நாடுகளில் வாழ்கின்ற புத்தி ஜீவிகள் குய்யோ முறையோ எண்டு குரல் வைக்கிறார்கள்.

அவர்கள் குரல் வைப்பதிலும் நியாயம் உண்டு. எத்தனை கோடி சனத்தொகை பெருகினாலும் அத்தனைக்கும் உணவு, உறைவிடம் மற்றும் சுகாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு போன்ற இன்னோரன்ன தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமே!

இப்பவே 700 கோடி சனத்தொகையில் இருக்க இடமின்றி உண்ண உணவின்றி வேலைவாய்ப்புக்கள் இல்லாமல் அல்லோல கல்லோலப்படுகிறது நாடு.

இறப்பு வீதத்தை விடவும் பிறப்பு வீதம் கூடுதலாக இருப்பதாலே சனத்தொகை தினமும் அதிகரித்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, தினமும் ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகளில் விமான, புகையிரத மற்றும் வாகன விபத்துக்களால் தினமும் மடிபவர்களும், நஞ்சருந்தி, தூக்குமாட்டி, எண்ணெய் ஊற்றி தற்கொலை செய்பவர்கள் பற்றியும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

நாட்டுக்கு நாடு ஏற்படும் இயற்கை அனர்த்தங்களான புயல், சூறாவளி, சுனாமி, பூகம்பம். எரிமலை வெடிப்பு, கடல்கொந்தளிப்பு போன்றவைகளில் அழிகின்ற சனத்தொகை எத்தனை?

அந்தக் காலங்களில் நாட்டுக்கு நாடு நடைபெற்ற யுத்தங்களை விட இக்காலத்தில் உள்நாடுகளிலேயே யுத்தங்கள் நடைபெறுவதால் மனிதர்கள் கொல்லப்பட்டும் வருகிறார்கள்.


இந்நிலையில் 700 கோடி சனத்தொகை ஏற்பட்டுள்ளதென்றால் "சமீபத்தில் ஒரு பத்திரிகையில் கேள்வி பதில் பகுதியில் இது சம்பந்தமான கேள்வி ஒன்றுக்குப் பதில் எழுதியவர் இதற்குப் பதில் எழுதுவதற்கு இடையிலேயே இருநூறு பேர்" பிறந்திருப்பார்கள் என்ற கூற்றே ஞாபகத்திற்கு வருகிறது.

ஆனால் உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருக்கையில், ஒவ்வொரு வீட்டிலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற கதைப் பேச்சு ஞாபகத்திற்கு வந்துபோகிறது.

700 ஆவது கோடி பிள்ளை பிறந்துள்ளது இலங்கையிலா- தாய்லாந்திலா என்ற பட்டிமன்றம் நடந்து வருகையில் தாய்லாந்து வெள்ளத்தில் "மின்சாரம் ஊடுருவி 50 பேர்கள் துடிதுடித்துச் சாவு" என்ற செய்தி வந்துள்ளது.

பிறப்பும், இறப்பும் அழிவும் அந்தக் காலம் தொட்டு இந்தப் பூமியை ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனாலும் பிறப்பு வீதத்தைப் பார்க்கவும் இறப்பு வீதம் குறைவென்பதாலே சனத்தொகை உலகில் அதிகரித்து வருகிறது. எனக்கேதோ இந்த 700 கோடி பெரிசாகப் படவில்லை பாருங்கோ!

# மின்னொளியில் இறுதிப் போட்டி மனோகரா, கலைமதி இன்று மோதல்



கலைமதி அணி

(நெல்லியடி)

யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் வடமராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்படும் இக்கால்பந்துத் தொடரில் பல முன்னணிகள் அணிகள் பங்கு கொண்டன.

இன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு யங்கமன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு அல்வாய் மனோகரா அணியும் கலைமதி அணியும் மோதவுள்ளன.

நீண்டதொரு இடைவெளிக்குப் பின்னர் இறுதிப் போட்டியில் தகுதி பெற்றுள்ள மனோகரா அணி இப்போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்ற அதிக பிரயத்தனங்களை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, வளர்ந்துவரும் கலைமதி அணியும் கிண்ணத்தை கைப்பற்றி தங்கள் திறமைகளை வெளிக்கொணரும் சந்தர்ப்பமாக இந்த இறுதிப் போட்டியைப் பயன்படுத்திக் கொள்ளும் என நம்பப்படுகின்றது.

அந்த வகையில் இன்றைய இறுதிப் போட்டி இறுதி வரை மிகுந்த பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் ரசிகர்களுக்கு அமையும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (12)



மனோகரா அணி

## உபயகதிர்காமம் அணி முதல் போட்டியில் வெற்றி

(மட்டுவில்)

இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் சலஞ்சர் கிண்ண மென்பந்து கிரிக்கெட் தொடரின் முதல் வெற்றியை உபயகதிர்காமம் அணி பதிவாக்கியுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான 16 ஓவர்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் தொடரில் முதல் போட்டி நேற்று முன்தினம் உடுப்பிட்டி லெனின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் உபயகதிர்காமம் அணியும், வல்லை. அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய உபயகதிர்காமம் அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மனோ, கமல் தலா 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரஞ்சன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய வல்லை அணி 14 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் திவாகர் 13, உதயன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோகுலன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதேவேளை, இன்றைய போட்டியில் ஸ்வேர்ஸ் அணியை எதிர்த்து லெவின் ஸ்ரார் அணி மோதவுள்ளது. (118)

## ஆசிய மெய்வல்லுநர் குறித்த முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெறவுள்ள கனிஷ்ட பிரிவினருக்கான ஆசிய தடகளப் போட்டியை முன்னிட்டு வடமாகாணத்திலுள்ள மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர், செயலாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வடமாகாண விளையாட்டுத்திணைக்களப் பணிப்பாளர் அண்ணாத்துறை தெரிவித்துள்ளார்.

மருதனார் மடத்தில் அமைந்துள்ள வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி காலை 10.00 மணியளவில் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர், செயலாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

கனிஷ்ட பிரிவினருக்கிடையில் இடம்பெறவுள்ள ஆசிய மெய்வல்லுநர் போட்டி குறித்து முக்கிய தீர்மானங்கள் இக்கலந்துரையாடலில் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (93)

# கிரீடா சக்தி மூலம் தெரிவான கிளிநொச்சி மாவட்ட வீரர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை வீர, வீராங்கனைகள் கடந்த நான்காம் திகதி கிரீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டனர்.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கால்பந்து, ஹொக்கி, வலைப்பந்து, கரப்பந்து, கூடைப்பந்து, கபடி போன்ற விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஐந்து வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப் பட்ட வீர,வீராங்கனைகளின் விபரம் வருமாறு

**கால்பந்து**

(ஆண்கள்)

பி. நவீன் பிரகாஷ் (விநாயகபுரம்), ரி. டென்சன் (இரத்தினபுரம்), ஆர். தினேஷ் (பரவிப் பாய்ஞ்சான்), ஜெ.டினேஷியன் (இரணைமாதா நகர்), எம்.சிவாலிஷன் (முழங்காவில்).

பெண்கள்

ஏ.மேரி அமாலினி ( வலைப்பாடு, வேராவில்), எம். அன்சிவினுசியா (வலைப்பாடு, வேராவில்), ஏ.சந்திராவதி (உதயநகர் மேற்கு), ரி.சங்கவி (சிவநகர், உருத்திரபுரம்), பி. மேரி டெனிஸ்ரெலா (வலைப்பாடு, வேராவில்).

**கூடைப்பந்து**

ஆண்கள்

என்.கௌதமன் (விவேகானந்தநகர், கிளிநொச்சி), என்.அபிமன் (குரக்கன் கட்டு, பரந்தன்), எம்.விதுஜன் (செல்வா வீதி, வட்டக்கட்சி), எம்.அருண் (பாரதி புரம், கிளிநொச்சி), ஜெ.நிறோஜன் (பாரதிபுரம், கிளிநொச்சி).

பெண்கள்

ஆர். டசிந்தா (547, இரத்தினபுரம்), எஸ். சுதர்சினி (டி 5, பரந்தன்), பி.சதுஷிகா (கல்மடு), கே.உஷாந்தி (இல.682, கல்மடு), எஸ்.சத்தியா (குமாரபுரம், பரந்தன்).

**வலைப்பந்து**

ஆர்.டினோஷா (இல: 271 செல்வா வீதி, வட்டக்கச்சி), எஸ். டக்ஷா (இல: 219 செல்வா வீதி, வட்டக்கச்சி), கே.நிதர்சினி (இல: 242 சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி), இ.யூஜினா (நாவலர் வீதி, முழங்காவில்), கே.கஜீபனா (அழகரட்ணம் வீதி, வட்டக்கச்சி).

**கரப்பந்து**

ஆண்கள்:

எஸ். பானுசாந் (இராமநாதபுரம், வட்டக்கச்சி), ரி. பவித்திரன் (இராமநாதபுரம், கிளிநொச்சி), ரி. சசிதரன் (இரத்தினபுரம், கிளிநொச்சி), என். தவகுமார் (மலையாளபுரம், கிளிநொச்சி), கே. குபிர்தன் (ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி)

பெண்கள்

ஏ. ஜீவிதா (முல்லையடி, பாலை), பி. தனுசா (ஸ்கந்தபுரம் கிளிநொச்சி), வி. மாவிதா (ஸ்கந்தபுரம் கிளிநொச்சி), ஆர். வினிதா (குமாரபுரம் பரந்தன்), எஸ். கிருஷாந்தி (ஜெயந்திநகர் கிளிநொச்சி)

**கபடி**

ஆண்கள்

கே. நிர்மலன் (கிளி பூநகரி), கே. நிருபன் (கிளி. பூநகரி ம.வி. ), ஏ. மயூரன் (கிளி. பூநகரி ம.வி.), ரி. விதுசன் (கிளி. பூநகரி ம.வி.), எஸ். குகின்சன் (கிளி. அக்கராயன் ம.வி.)

பெண்கள்

டி. தயாழினி (சிவநகர் ஜி.ரி.எம்.எஸ்.), ரி. கிருபாலினி (சிவநகர் ஜி.ரி.எம்.எஸ்), ஏ. கார்த்திகா (பூநகரி ம.வி.), பி. சயந்தினி (பூநகரி ம.வி.), எஸ். கீதா (சிவநகர் ஜி.ரி.எம்.எஸ்) (93)

# அருட்தந்தை அணி அபார வெற்றி





(படப்பிடிப்பு : சுரேஷ்)

(யாழ்ப்பாணம்)

அருட்தந்தை அணிக்கும் சென் சேவியர் குருத்துவக் கல்லூரி சிரேஷ்ட அணிக்குமிடையிலான கால்பந்துப் போட்டியில் அருட்தந்தை அணி சிறப்பான வெற்றிபெற்றது.

யாழ். குருமட ஸ்தாபகர் புனித மாட்டீனார் நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த 13ஆம் திகதி யாழ். குருமட மைதானத்தில் இக்கால்பந்துப் போட்டி நடைபெற்றது.

இதில் சென் சேவியர் குருத்துவக் கல்லூரியின் கனிஷ்ட அணிக்கும் யாழ். குருமட அணிக்கும் இடையில் முதலாவது போட்டி நடைபெற்றது. இதில் இரு அணிகளுமே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தன. இறுதியில் 1-1 என்ற கோல் கணக்கில் இப்போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டி யாழ். குருமட அருட்தந்தை அணிக்கும் சென் சேவியர் குருத்துவக் கல்லூரியின் சிரேஷ்ட அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் அருட்தந்தை அணியின் வீரர் லியேனியனின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 4-2 என்ற கோல் கணக்கில் அருட்தந்தை அணி வெற்றி பெற்றது. லியேனியல் மூன்று கோலை போட்டு போட்டியின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார். (20)

## விளையாட்டுச் செய்திகள்

## ஊரெழு றோயல் அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 40 வயதிற்கு மேற்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் ஊரெழு றோயல் அணி அபார வெற்றிபெற்றது.

குருநகர் சென் றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் பாசையூர் சென் அன்ரனீஸ் மரூன் அணியும், ஊரெழு றோயல் அணியும் மோதின. ஆட்டம் தொடங்கி நிறை வடையும் வரை ஆதிக்கம் செலுத்திய றோயல் அணி 7-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

# தன்னம்பிக்கை தந்த வெற்றி



(பரிஸ்)

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் இரட்டையர் பட்டம் வென்றது தன்னம்பிக்கை அளித்துள்ளது என, இந்தியாவின் ரோகன் போபண்ணா தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி அதிக தன்னம்பிக்கை அளித்துள்ளது. கடின உழைப்பிற்குக் கிடைத்த பலனாக பார்க்கிறேன். ஏ.டி.பி., ரென்னிஸ் தொடரில், இந்த ஆண்டு மட்டும் மூன்று இரட்டையர் பட்டம் வென்றுள்ளோம்.

கடந்த ஆண்டு நடந்த போட்டியில் சிறப்பாகச் செயற்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு நுட்பமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், மூன்று பட்டம். வென்றுள்ளோம்.

லண்டனில் உள்ள அரினா நகரில் வரும் 20ஆம் திகதி ரென்னிஸ் தொடர் தொடங்குகிறது.

இதற்கு தகுதி பெற்றுள்ளது மகிழ்ச்சியாக உள்ளது. இதில் முன்னணி வீரர்களுக்கு எதிராக எங்களின் திறமையை நிரூபித்து பட்டம் வெல்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.



யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான வலய மட்டக் கால்பந்துத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள் பயிற்றுநருடன் நிற்பதைக் காணலாம். இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

# லக்ஸ்மன், டோனி சதம் மே.தீவுகள் தடுமாற்றம்





(கொல்கத்தா)

இந்திய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தடுமாறி வருகின்றது.


இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில் நடைபெற்று வருகின்றது.

ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 346 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இந்திய அணி, லக்ஸ்மன், டோனி ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிகையைப் பெற்றது. ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 224 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இறுதியில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 631 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்திய அணி ஆட்டத்தை, இடை நிறுத்தியது. இதில் லக்ஸ்மன் ஆட்டமிழக்காது 176 ஓட்டங்களைப் பெற்றார். இது இவரின் 17ஆவது டெஸ்ட் சதமாகும். அணித் தலைவர் டோனி 144 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். டோனியின் ஐந்தாவது சதமாக இது அமைந்தது. பந்து வீச்சில் டரன் சமி, பிஷோ தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எட்வேர்ட்ஸ் 12 ஓட்டங்களுடனும், பிராவோ நான்கு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். பந்துவீச்சில் அஸ்வின் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



# தொடரும் உத்வேகம்



(கொல்கத்தா)

ஜமைக்காவில் நான் அடித்த சதம் எனக்கு நல்ல நம்பிக்கையைக் கொடுத்தது. அந்த உத்வேகத்தை நான் தொடருகிறேன். அதன் தொடர்ச்சியே கொல்கத்தாவில் அடிக்கப்பட்ட சதம் என இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ராவிட் தெரிவித்தார்.

எனது துடுப்பாட்டத்தில் சில விடயங்கள் குறித்து பயிற்சியாளர் டன்கன் பிளட்சரிடம் ஆலோசனை பெற்றேன். அவர் சில விடயம் குறித்து எனக்கு அளித்த ஆலோசனைகள் நான் சிறப்பாக செயற்பட உதவிகரமாக இருந்தது. அவர் ஆட்டத்தை நன்கு கணிக்கிறார். எனது ஆட்ட நுணுக்கத்தை நான் அதிகம் மாற்றவில்லை. எனது இந்த நல்ல ஆட்டத் திறனை நீண்ட நாட்களுக்கு நீடிக்க முயற்சி எடுப்பேன். எனக்கு கடினமாக காலங்களும் அமைந்து இருக்கிறது. கிரிக்கெட்டில் ஏற்ற, இறக்கங்களை தவிர்க்க முடியாது. எப்போது நல்ல ஆட்டத் திறன் நீடிக்கும் என்பது தெரியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரசனையில் மாற்றம்



கடந்த சில ஆண்டு களாகவே இந்திய மக்களிடம் மற்ற விளை யாட்டுகளையும் ரசிக்கும் எண்ணம் ஏற்பட்டுள்ளதாக நினைக் கிறேன். இது இந்தியாவின் ஏனைய விளையாட்டுக்களும் வளர்ச்சி நிலையை நோக் கிச் செல்ல துணைபுரி யும் என சதுரங்க உலகச் சம்பியன் விஸ்வ நாதன் ஆனந்த் தெரிவித்தார்.

சமீபத்தில் நொய்டாவில் நடைபெற்ற ஃபார்முலா 1 கார் பந்தயத்தை மட்டுமல்ல, எல்லாப் போட்டிகளையுமே ரசிக்க தொடங்கிவிட்டனர். அதை நாம் சரியாகப் பயன்படுத்தி, அவர்களை சதுரங்கப் போட்டியையும் ரசிக்க வைக்க முயற்சிக்க வேண்டும்.

சில நேரங்களில் சதுரங்கப் போட்டியில் விளையாடிக் கொண்டிருக்கும்போது தனது மகனின் நினைவு வந்துவிடும். ஆனாலும் அது தனது கவனத்தை திசை திருப்பாது. அது மகிழ்ச்சியாகவே இருக்கும் என்றார்.

# கிரிக்கெட் உறவுகளைத் தொடர ஆர்வம் கொள்கிறது பாகிஸ்தான்

(லாகூர்)

இந்தியாவுடனான இருதரப்பு கிரிக்கெட் உறவுகளை மீண்டும் ஆரம்பிக்க பாகிஸ்தான் விரும்பம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு இந்தியாவுக்கான கிரிக்கெட் விஜயத்திற்கான கோரிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவர் விடுத்துள்ளார்.

இருதரப்பு உறவுகளை கூடிய விரைவில் ஆரம்பிப்பது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் என் சீனிவாசனுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாவும் ஷாஹா அஷ்ரப் கூறியுள்ளார்.

அதில் 2008 ஆம் ஆண்டு 166 பேரின் உயிர்களைக் காவுகொண்ட மும்பையில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு பாகிஸ்தானை தளமாக கொண்ட ஆயுததாரிகளே காரணம் எனத் தெரிவித்து பாகிஸ்தானுடனான கிரிக்கெட் உறவுகளை இந்தியா நிறுத்தியிருந்தது.

அத்துடன் 2009 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த டெஸ்ட் தொடரையும் இந்தியா இரத்துச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச கிரிக்கெட் பேரவையின் அடுத்த ஆண்டுக்கான போட்டி அட்டவணையில் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு இடையிலான டெஸ்ட் தொடரும் இடம்பெற்றுள்ளது.

2009 ஆம் ஆண்டு இரத்துச் செய்யப்பட்ட டெஸ்ட் தொடருக்கான நட்டஈட்டினை பாகிஸ்தான் கிரிக்கெட் நிறுவனம் தொடர்ந்தும் கோரி வருகின்றது.



இந்த நிலையில் டெஸ்ட் தொடரை நடத்துவது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் விரை வில் இறுதி முடிவினை மேற்கொள்ள வேண்டுமென ஷாஹா அஷரப் கூறியுள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இந்தக் கோரிக்கைக்கு சாதகமான பதில் நிச்சயம் கிடைக்கும் என கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சதத்தை நோக்கி சிட்னி மைதானம்

(சிட்னி)

சிட்னி மைதானத்தில் நடக்க உள்ள 100ஆவது டெஸ்டில் இந்தியா, அவுஸ்ரேலிய அணிகள் மோதவுள்ளன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் அவுஸ்ரேலியா செல்லும் இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இதில் இரண்டாவது டெஸ்ட் போட்டி (வரும் 2012, ஜனவரி 3-6) நடக்கவுள்ள சிட்னி மைதானம் புதிய சாதனை படைக்கிறது. இது, இம்மைதானத்தில் நடக்கவுள்ள 100ஆவது டெஸ்ட். 100 அல்லது அதற்கும் மேல் போட்டிகள் நடந்த லண்டன் லோர்ட்ஸ் (122), மெல்போர்ன் கிரிக்கெட் கிளப் (103) வரிசையில், சிட்னி மூன்றாவது இடத்தைப் பிடிக்கிறது.

இதனால், போட்டி நடக்கும் ஐந்து நாட்களையும் சிறப்பான முறையில் கொண்டாட, பல்வேறு ஏற்பாடுகள் தீவிரமாக நடக்கிறது.

கடந்த 1882 முதல் டெஸ்ட் போட்டிகள் நடக்கும் இம்மைதானத்தில், அவுஸ்ரேலிய அணி 54 வெற்றி, 28 தோல்வி மற்றும் 17 போட்டியை சமநிலை செய்துள்ளது.

# அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளில் திடீர் அதிகரிப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய விவகாரம் தொடர்பான பரிசோதனை மற்றும் பயிற்சி மத்திய நிலையம் மற்றும் கொழும்பு, தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய விவகாரம் தொடர்பான பரிசோதனை மற்றும் பயிற்சி மத்திய நிலையத்தின் விற்பனை நிலையப் பிரிவின் அதிகாரி டபிள்யு.எம்.துமிந்த பிரியதர்ஷன கருத்துத் தெரிவிக்கையில், நவம்பர் 9 ஆம் திகதியிலிருந்து போஞ்சியின் விலை 50 வீதம் குறைந்துள்ளதாகவும் மரக்கறிகளின் விலை நூற்றுக்கு 30 வீதம கூடியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் கருவாடுகள் கீழ்மட்டத்தில் உள்ளன. அத்துடன் நெத்தலி, கட்டா, மற்றும் தோரா கருவாடுகளின் விலை நூற்றுக்கு 20 வீதம் கூடியுள்ளன. தோரா மீன் நூற்றுக்கு நூறு வீதம் கூடியுள்ளது. இது தற்பொழுது நிலவும் காலநிலை மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.


தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறி வகைகள் பெரும்பாண்மையாக மொத்தத் தொகைக்கு நூற்றுக்கு 30 வீதம் அளவும் சில்லறை விலைக்கு நூற்றுக்கு 50 வீதம் அளவும் கூடியுள்ளது. ஒவ்வொரு வருட இறுதிக் காலகட்டத்தின் போது இந்த நிலை ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு மெனிங் வர்த்தக நிலையத்தின் பொது வர்த்தக சங்கத்தின் தலைவர் லால் ஹெட்டிகே கருத்துத் தெரிவிக்கையல், கருவாடுகள் மற்றும் ஊர் மரக்கறிகளின் விலைகள் நூற்றுக்கு 50 வீதம் கூடியுள்ளதாகத் தெரிவித்தார்.

"லக் சதொச" நிறுவனத்தின் தலைவர் நளீன் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், சீனி மற்றும் பருப்பு உட்பட பெரும்பான்மையான அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலை விரைவில் குறையவுள்ளதாகத் தெரிவித்தார்.

# பொன்சேகாவிற்கு எதிரான வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)



இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாகவும் அரசாங்கத்திற்கு எதிராகச் சதி செய்ததாகவும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரின் பிரத்தியேக உதவியாளர் சேனக ஹரி பிரிய ஆகியோர மீது குற்றஞ் சுமத்தப்பட்டு தொடுக்கப்பட்ட வழக்கு ஜனவரி 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு கொழும்பு மேல நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சரத் பொன்சேகா இவ் வழக்கில் தனது சார்பாக வாதாடுவதற்குத் தன்னை நியமித்திருப்பதாக சிரேஷ்ட சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி தெரிவித்தார். இவ் வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறும் அவர் கோரினார்.

அரசின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி தமித் தொட்டவத்த இக்கோரிக்கையை ஆட்சேபித்தார்.

எனினும் இறுதியில் மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர இவ்வழக்கை ஜனவரி 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# புதிய பறிமுதல் சட்டம் முதலீட்டில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும்


(கொழும்பு)

அண்மையில் நிறைவேற்றப்பட்ட பறிமுதல் சட்டமானது இலங்கைக்கு எதிர்மறையான புள்ளிகளை வழங்கும் எனவும் அது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வருவதை தடுக்கும் எனவும் சர்வதேச கடன் தரப்படுத்தல் முகவரகமான "மூடீஸ்" அறிக்கையொன்றில் எச்சரித்துள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை அங்கீகரித்துள்ள இவ்வறிக்கை செயற்பாடு குறைந்த நிறுவனங்கள், குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றன. சொத்துக்களை சுவீகரிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை விமர்சித்துள்ளது.

இவ்வருட முற்பகுதியில் இலங்கையின் கடன் மதிப்பீட்டை உயர்த்திய தரப்படுத்தல் முகவரகங்களில் பிட்ச் மற்றும் ஸ்டான்டர்ட் அன்ட் புவர் ஆகியனவற்றுடன் மூடீஸூம் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கணினிகளின் ஊடாகக் கணக்காய்வு



(கொழும்பு)

கணினிகளின் ஊடாக கணக்காய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு கணக்காய்வாளர் திணைக்களம் புதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதுவரை காலமும் பதிவாளர்களினால் இந்த நடவடிக்கைகள் முனனெடுக்கப்பட்டதாக கணக்காய்வாளர் மா அதிபர் எச்.ஏ.எஸ். சமரவீர குறிப்பிட்டார்.

கணினிகளில் விசேட மென்பொருள் பொருத்தப்பட்டு அதனூடாக கணக்காய்வுகளை முன்னெடுக்க முடியும். இந்தத்திட்டம் எட்டு அரச கூட்டுத்தாபனங்களில் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கப்பட்டதாகவும், அது பாரியளவில் வெற்றியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கைகளின் ஊடாக நாட்டில் கணக்காய்வு அறிக்கைகள் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் , குறுகிய காலப்பகுதிக்குள் சிறந்த கணக்காய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என அவா மேலும் தெரிவித்தார்.

# அரச நிறுவனங்கள் தனியாருக்கு குத்தகைக்கு வழங்கப்படுகின்றன

(கொழும்பு)

தற்போது மூடப்பட்டுள்ள அரசுக்குச் சொந்தமான இரண்டு நிறுவனங்களை தனியார் பிரிவுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் கீழ் அம்பிலிப்பிட்டி கடதாசி உற்பத்திச்சாலை மற்றும் கந்தளாய் சீனித் தொழிற்சாலை ஆகியவற்றை 30 வருட கால குத்தகைக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் இரண்டிற்கு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் தயாஷித திசேர குறிப்பிட்டார்.

அம்பிலிப்பிட்டி கடதாசி உற்பத்தித் தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் . நேற்றுமுன்தினம் கைசாத்து இடப்பெற்றது. இதற்கமைய குறித்த தொழிற்சாலை 600 மில்லியன் ரூபாவுக்கு குத்தகைக்கு வழங்கப்படுவதுடன், குறித்த வெளிநாட்டு நிறுவனத்தினால் 400 மில்லியன் ரூபா அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டது.

அத்துடன் இந்தத் தொழிற்சாலையில் கடமையாற்றிய 283 ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்கி பணியில் இருந்து நீக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் கீழ் இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனமும் எதிர்காலத்தில் தனியார் பிரிவிற்கு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. இவற்றின் ஊடாக தற்போது மூடப்பட்டுள்ள குறித்த தொழிற்சாலைகளில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதுடன் தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் தயாஷித திசேர மேலும் கூறினார்.

## இந்தியாவில் இருந்து ரயில் பெட்டிகள்

(கொழும்பு)

இலங்கைக்கு என சென்னை ஐ.சி.எப்.பிலிருந்து ரயில் பெட்டிகள் தயாரித்து, கொண்டுவரப்பட்டுள்ளன.

சென்னை ஐ.சி.எப்.பில், 100 கோடி ரூபாய் செலவில் இந்த 120 ரயில் பெட்டிகள், நவீன தொழில் நுட்பத்தில் தயாரிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த மாதம் வரை, 9 ரயில்களுக்கான ரயில் பெட்டிகள், சென்னையிலிருந்து கப்பல் மூலம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன. 10ஆவதாக, ஒரு ரயிலுக்கான ஆறு பெட்டிகள், ஐ.சி.எப்.பிலிருந்து இலங்கைக்கு நேற்றுமுன்தினம் வந்து சேர்ந்தன.

## விபத்தில் பெண் பலி

(புத்தளம்)

முந்தல் ரயில் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

வான் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பகுதியைச் சேர்ந்த 37 வயதான பெண்ணொருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். தனது குழந்தையை பாடசாலையில் விட்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

# சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் விசேட கல்வியலகு

(கொழும்பு)

ஆயிரம் இரண்டாம் நிலை பாடசாலைகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள தலா ஒரு பாடசாலையில் சிறப்புத் தேவையுடைய மாணவர்களின் பொருட்டு கல்வி அலகொன்று உருவாக்கப்படவுள்ளது என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.


"கண் குருடானாலும், ஆயிரம் கண்கள் உள்ளது போன்று உலகைக் காண்பதற்கு கைகொடுங்கள்" என்ற தொனிப்பொருளில் குறித்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.



ஹோமாகமை - மீகொட மகா வித்தியாலத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இலங்கை கட்புலன் பாதிப்புற்றோர் தொடர்பான சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் தமது திட்டத்தை வெளிப்படுத்தினார். இதனடிப்படை யில், விசேட முறைமைக்கமைய ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிவேக வீதியில் பயணிக்க 400 ரூபா கட்டணம் அறவீடு

(கொழும்பு)



நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள தெற்கு அதிவேக மார்க்கத்தின் கொட்டாவை முதல் காலி வரையான வீதி எதிர்வரும் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த வீதியினூடாகப் பயணிப்பதற்கு ஆகக் குறைந்த கட்டணமாக 400 ரூபாவை செலுத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியினூடாக மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்க முடியுமெனவும், 4 வழிகளை உள்ளடக்கிய இந்த வீதியில் காலி நகருககுச் செல்வதற்கு ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களுமே செல்லுமெனவும் குறிப்பிடப்படுகிறது.

தெற்கு அதிவேக மார்க்கத்திற்குள் பிரவேசிப்பதற்கும் வெளியேறுவதற்கும் எட்டு இடங்கள் காணப்படுவதுடன் அவை கொட்டாவை, கஹதுடுவ, களனிகம, வெலிபன்ன, குறுந்துஹா, தாபம, தொடங்கொடை, பத்தேகம மற்றும் பின்னதுவ ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 18, 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் எவரும் அதிவேக வீதியைப் பார்வையிட முடியுமெனவும், எவ்வாறாயினும் இந்த வீதி திறக்கப்பட்டதன் பின்னர் அங்கு பிரவேசிப்பது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியின் போக்குவரத்துக் கடமைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 500 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# அரசாங்கமே மாணவர் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது

(கொழும்பு)



அரசாங்கமே பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தி வருகின்றது. மாணவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்வாறான கலகங்கள் ஏற்படுத்தப்பட்டதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

பல்கல்லைக்கழக வளாகத்திற்குள் ஏற்படக் கூடிய கலக நிலைமைகளைக் கட்டுப்படுத்த பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் அறிவித்திருந்தார். பல்கலைக்கழகத்திற்குள் பொலிஸார் கடமையில் ஈடுபட அனுமதியளிக்கப்படமாட்டாது என்றும்,

மாணவர்களின் உரிமைகளை ஒடுக்கும் வகையிலான முயற்சிகளுக்கு இடமளிக்கப்போவதில்லை எனவும், 1984ஆம் ஆண்டிலும் இதேபோன்றதொரு நிலைமை காணப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மேல்மாகாண மருத்துவர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து அரச மருத்துவமனை மருத்துவர்களும் இன்று முதல் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் செயலாளர் சந்திக எபிடகட்டுவ இந்தத் தகவலைத் தெரிவித்தார். இன்று 8 மணி தொடக்கம் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் செயற்பாடுகளைக் கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் இவ்வாறு பணிநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக சந்திக குறிப்பிட்டார்.

மேல் மாகாண அரச மருத்துவர்களின் தொலைபேசிக் கொடுப்பனவுகளைக் கூட செலுத்த மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தவறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆ) மக்களிடையே புதுமைகள் தோன்றினாலும் பழமைகள் முற்றாக அழிந்துவிடவில்லை. தற்போதைய காலகட்டத்தில் பழமையைப் பேண வேண்டும் என்பவருக்கும் புதுமை நாட்டம் கொள்ள வேண்டும். என்பவருக்கும் இடையிலான ஓர் உரையாடல் எழுதுக.

இ) கொதிக்கும் வெயிலில் விளையாடிய நான் இளைப்பாற எண்ணி மைதானத்தில் ஓர் மூலையில் உள்ள மேசையின் மேல் ஏறி இருந்தேன். இதமாக இருந்தது. உன்னைப்போல் எத்தனை பேருக்கு சுகம் கொடுக்கிறேன் தெரியுமா? என்ற குரல் கேட்டது திரும்பிப் பார்த்தேன். “மேசை என்னைப் பார்த்து கூறத் தொடங்கியது......” தொடர்ந்து அது கூறுவதாக அமைந்த கற்பனைக் கட்டுரை.

ஈ) ஒற்றுமையே பலம். இதனை விளக்குவதாக சிறுகதை எழுதுக.

03. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் சாராம்சத்தை சுருக்கி சுமார் 40-50 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)

அவரவர் கொள்கைக்கும் மனப்பக்குவத்துக்கும் ஏற்ப மக்கள் சமுதாயத்தோடு விதவிதமான இணக்கங்கள் கொள்கின்றனர். தன்னுடைய சுகவாழ்வில் கண்ணும் கருத்துமாய் இருப்பவனுக்கு உலகில் உள்ள நலமும் கேடும் தென்படுவதில்லை. தான் நாடுகின்ற இன்பம் ஒன்றிலேயே அவன் எண்ணம் வைத்தவனாய் இருக்கிறான். அத்தகையவன் மக்களுள் கடைத்தரமானவன். அவன் விலங்குகளுக்கு ஒப்பானவன். இனித் தரத்திலே அவனைவிட மேலானவன் ஒருவன் இருக்கிறான்.

உலகில் கேடுகள் பல இருக்கின்றன என்னும் உண்மையை அவன் அறிந்து கொள்கிறான். அக்கேடுகளிலிருந்து தான் தப்பித்துக் கொள்வதற்கு உலகை அவன் துறந்து விடுகின்றான். தனியாய் இருந்து தனக்குத் தோன்றும் அமைதியான நல்வாழ்வை வாழ அவன் முயலுகின்றான்.....அத்தகையவனைத் துறவியென்று அழைப்பது உலக வழக்கு. ஆனால் துறவிகளுள் அவன் கடையவன் ஆகின்றான். ஏனென்றால் கேட்டுக்கு அஞ்சி அவன் உலகினின்று விலகியவன் ஆகிறான். இவனிலும் மிக்கானவாக மற்றொருவன் இருக்கிறான்.

அவனைச் சமூகச் சீர்திருத்தக்காரன் என்று சொல்ல வேண்டும். சமூகத்திலுள்ள சீர்கேடுகளையெல்லாம் அவன் தெளிவுபட அறிந்து கொள்ளுகின்றான். அவைகளை விலக்குவது தன் கடமையென்று அவன் உணருகின்றான். கேடுகளைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்து அவன் புகட்டுகின்றான். கேடுகளை அகற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நிர்மாணிக்கின்றான். பலரைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு சமூகச் சீர்திருத்தங்களில் அவன் ஈடுபட்டிருப்பதால் அவனுடைய எண்ணத்தையும் செயலையும் சிறப்பித்துக் கூற நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைதருக.

வாழ்க்கையில் நேரும் துன்பத்தை மக்கள் அனைவரும் பெறுகின்றனர். ஆயினும் கலை வடிவு பெறும் துன்பத்தை எவரும் பெறுவதில்லை. வீட்டிலும், நாட்டிலும் துன்பத்தைத் துடைக்க முயலும் மனம் பாட்டிலும் நாடகத்திலும் துன்பத்தை வரவேற்கிறது. ஆழ்ந்து நோக்கினால் காவியம், ஓவியம், இசை, நாடகம் முதலியவற்றில் துன்பப் பகுதிகள் உள்ளதைக் கொள்ளை கொள்வது போல் இன்பப் பகுதி உள்ளதைக் கவர்வதில்லை. சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம் பலமுறை கற்கப்படுவதற்கும், கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டமும் சுந்தர காண்டமும் திரும்பத் திரும்பப் படிக்கப்படுவதற்கும் காரணம் இதுவே. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப் பெரும்புலவர் இன்பநாடகமும், துன்பநாடகமுமாகப் பலவற்றை இயற்றிருந்தும், அவருடைய துன்ப நாடகங்களே சிறந்தவையாகப் போற்றப்பட்டு விளங்குவதற்கும் இதுவே காரணம்.

1) இப்பகுதியில் கூறப்பட்டிருக்கும் பிரதான கருத்து யாது?
2) சிலப்பதிகார மதுரைக் காண்டம் எத்தகைய நிகழ்ச்சியை சித்தரித்துக் காட்டுகிறது?
3) முத்தமிழ் எனப்படுபவை எவை?
4) உள்ளத்தைக் கொள்ளை கொள்ளல் என்ற தொடரின் பொருள் யாது?
5) சிலப்பதிகாரம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

05. இன்று பேருந்து (பஸ்) கட்டணங்களில் உயர்ந்துள்ள போதிலும் அதன் சேவைகள் திருப்திகரமாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி போக்குவரத்து அமைச்சருக்கு 100 சொற்களில் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.





# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 2 மணி

# கல்வி முரசு

## தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி I

**பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

**கவனிக்க.**

i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல்பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. “கொண்டானில் துன்னிய **கேளிர்** பிறரில்லை...” என்பதில் கேளிர் என்பதன் பொருள்.
1) பகைவன் 2) உறவினர் 3) நண்பன் 4) ஏடு

02. “பெருந்த டங்கட் பிறை**நுதல்**ார்க் கெலாம்...” இதில் **நுதல்** என்பதன் பொருள்.
1) முகம் 2) கண் 3) நெற்றி 4) வாய்

03. “மருள் தீர்ந்த **மாச**று காட்சியவர்” இங்கு **மாசு** என்பதன் எதிர்ப்பதம்,
1) தூய்மை 2) குற்றம் 3) அழுக்கு 4) நாற்றம்

04. பெரும் செல்வர் இல்லத்து **நல்கூர்ந்தார்** போல **நல்குரவு** என்பதன் எதிர்ப்பதம்?
1) நல்லறிவு 2) வறுமை 3) செல்வம் 4) ஏழை

05. **மந்தி** மரக்கொப்பிற்கு தாவியது. இதில் **மந்தி** என்பதன் எதிர்ப்பாற் சொல்.
1) களிறு 2) அலவன் 3) கடுவன் 4) பினை

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

06. எனக்கு BIOLOGY பாடம் என்றால் சரியான விருப்பம். இங்கு **BIOLOGY** என்பதன் தமிழ் வடிவம்.
1) அரசியல் 2) இராசயனவியல் 3) பௌதீகவியல் 4) உயிரியல்

07. பனையின் இளையது வடலி போல, புகையிலையின் இளையது,
1) நாற்று 2) கன்று 3) குட்டி 4) பிள்ளை

08. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல, எருது.
1) சீறும் 2) முக்காரம்போடும் 3) பிளிறும் 4) கனைக்கும்

09. மணலும் மணல் சார்ந்த இடமும்.
1) மருதம் 2) நெய்தல் 3) பாலை 4) குறிஞ்சி

10. சோமசுந்தரம் கந்தோருக்குச் சென்று திரும்பி வந்தார். இங்கு கந்தோர் என்பது.
1) போர்த்துச்கீச மொழி 2) ஆங்கி மொழி 3) ஒல்லாந்தர் மொழி 4) இலத்தின் மொழி

11. துன்பம், கடல், ஒலி ஆகிய பல பொருள் தரும் ஒரு சொல்,
1) கலி 2) மேகம் 3) சமுத்திரம் 4) சத்தம்

12. மாடுகள் பாதுகாப்பாகக் கட்டிவிடப்படும் இடம்.
1) பந்தி 2) பட்டி 3) தொழுவம் 4) குடிசை

13. பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்போர்?
1) தரகர் 2) முனிவர் 3) பொதுமலாளர் 4) தவிசாளர்

14. ஆட்டுக்கு மந்தை போல, உடு.
1) கூட்டம் 2) திரள் 3) மேகம் 4) பத்தி

15. பிற்காலத் தேவைக்கா சேமித்து வைக்கப்படும் பணம்.
1) எய்பில் வைப்பு 2) முதுசம் 3) பணம் 4) மானியம்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. அவள் தலையைத் தடவினாள். தலை தடவுதல் என்னும் மரபுத் தொடர்தரும் பொருள்.
    1) கேட்டல் 2) சிந்தனை செய்தல் 3) வருந்துதல் 4) மயங்குதல்
17. அடிவாருதல் என்பதன் மரபுத் தொடர்.
    1) ஏமாற்றுதல் 2) நம்பவைத்தல் 3) கைவிடுதல் 4) பராமரித்தல்
18. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு என்ற பழமொழிக்குப் பொருத்தமான ஒரு பழமொழி,
    1) பாத்திரம் அறிந்து பிச்சையிடு 2) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்
    3) வேலைக் கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு 4) புத்திமான பலவான்
19. அச்சாணியில்லாத தேர் முச்சாணும் ஓடாது என்ற பழமொழியின் கருத்து.
    1) தேர் ஓடுவதற்கு அச்சாணி அவசியம் 2) அச்சாணியில்லாத தேர் சரியும்
    3) ஒன்றின் முக்கியத்துவம் 4) அச்சாணியில்லாவிட்டாலும் மூன்று சாண் தூரமே ஓடமுடியும்
20. ஒன்றிலும் ஈடுபடாது இருத்தலை விளக்குவதற்குப் பொருத்தமான உவமைத் தொடர்.
    1) குடத்தில் விளக்குப் போல 2) கிணற்றுத் தவளை போல
    3) தாமரை இலைத் தண்ணீர் போல 4) இலை மறை காய் போல
21. சுடுநீர் அருந்துவது உடல் நலத்திற்குச் சிறந்தது. - சுடுநீர் என்பது.
    1) பண்புத் தொகை 2) அன்மொழித் தொகை 3) வினைத் தொகை 4) உவமைத் தொகை
22. அங்கு நின்றோரில் வரதன் பெரியவன். இதில் வந்த குறிப்பு வினைப் பகுபதம்.
    1) நின்றோர் 2) வரதன் 3) பெரியவன் 4) அங்கு
23. சிறிய முயல் அந்தப் புதருக்குள் பாய்ந்து ஒளிந்தது. இவ்வாக்கியத்தின் பெயர் அடை
    1) சிறிய 2) பாய்ந்தது 3) புதர் 4) முயல்
24. கமலாவும், விமலாவும், நிமலாவும், வாணியும் பாட்டுப் பாடினார்கள். இதில் வந்துள்ள உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்,
    1) முற்றுப்பொருள் 2) எச்சப் பொருள் 3) எண்ணுப் பொருள் 4) எதிர்மறைப் பொருள்
25. மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது. இங்கு விழுந்தவனை என்பது.
    1) வியங்கோள் வினை 2) தெரிநிலை வினை
    3) வினையாலணையும் பெயர் 4) குறிப்பு வினை
26. வட்டக் கல் என்பது
    1) பண்புத் தொகை 2) உவமைத் தொகை 3) வேற்றுமைத் தொகை 4) அன்மொழித் தொகை
27. கடிமனை என்பதில் கடி என்பது குறிக்கும் பொருள்.
    1) வாசனை 2) கூர்மை 3) காவல் 4) புதுமை
28. கொண்டு உடன் என்னும் சொல் உருபுகள்.
    1) மூன்றாம் வேற்றுமைக்குரியவை 2) ஏழாம் வேற்றுமைக்குரியவை
    3) ஆறாம் வேற்றுமைக்குரியவை 4) எட்டாம் வேற்றுமைக்கரியவை
29. கிளி + இறகு என்பதைப் புணர்த்தினால்.
    1) கிளியிறகு 2) கிளிஇறகு 3) கிளிறகு 4) கிளியின் இறகு
30. இரண்டாவது எழுத்து ஒன்றிவர அமைக்கப்படுவது.
    1) எதுவை 2) மடக்கு 3) சிலேடை 4) மோனை
31. பின்வருவனவற்றில் எழுத்துப் பிழைகள் ஒன்றிவர அமைக்கப்படுவது.
    1) கடலிற் புயல்க் காற்று வீசியதாற் கொந்தலிப்பு ஏற்பட்டது
    2) கடலிற் புயல்காற்று வீசியதாற் கொந்தளிப்பு ஏற்பட்டது
    3) கடலிற் புயற்காற்று வீசியதாற் கொந்தளிப்பு ஏற்பட்டது
    4) கடலிற் புயற்காற்று வீசியதாற் கொந்தழிப்பு ஏற்பட்டது
32. 1) ஒற்றுமை இல்லாவிடின் நாம் தாழ்வடைவது நிச்சயம்
    2) ஒற்றுமை இல்லாவிடின் நாம் தாள்வடைவது நிச்சயம்
    3) ஒற்றுமை இல்லாவிடின் நாம் தாழ்வடைவது நிட்சயம்
    4) ஒற்றுமை இல்லாவிடின் நாம் தாள்வடைவது நிட்சயம்



**பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

33. கமலும் நிமலும் கடைக்கு............
    1) வந்தான் 2) வந்தேன் 3) வந்தோம் 4) வந்தார்கள்
34. பறவைகள் தன் இருப்பிடத்திற்கு
    1) சென்றது 2) சென்றன 3) சென்றவை 4) சென்றனர்

**பின்வரும் வாக்கியங்களுள் இலக்கண வழுவற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

35. 1) இங்கிருந்து பார்க்கும்போது மரங்கள் சிறியதாய் காணப்படுகின்றன
    2) இங்கிருந்து பார்க்கும்போது மரங்கள் சிறியனவாய் காணப்படுகின்றன
    3) இங்கிருந்து பார்க்கும்போது மரம் சிறியனவாய் காணப்படுகின்றன
    4) இங்கிருந்து பார்க்கும்போது மரங்கள் சிறியனவாய் காணப்படுகின்றது
36. 1) ஒவ்வொரு செய்யுட்களும் ஒவ்வோர் உண்மைகளை விளக்குகின்றன
    2) ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வோர் உண்மையை விளக்குகின்றது
    3) ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வோர் உண்மைகளை விளக்குகின்றது
    4) ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வோர் உண்மையை விளக்குகின்றன

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37. நாளை நடைபெறவிருக்கும் இசைக் கச்சேரியை இன்று......................பார்த்தார்கள்.
    1) அங்கேற்றம் 2) ஒத்திகை 3) சரிபிழை 4) நடித்து
38. ஜனாதிபதி பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒரு மாதகாலத்திற்கு........................முடிவு செய்தார்.
    1) வைக்காமல்விட 2) ஒத்திவைக்க 3) திட்டமிட 4) கலைக்காமல்விட
39. எவரும் வெளியே போகக்கூடாது எனத் தடைவிதித்த போதிலும் அந்த மேலதிகாரி இருவருக்கு........அளித்தார்.
    1) விதிவிலக்கு 2) உறுதிமொழி 3) உத்தரவு 4) தண்டனை

**கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40. அ) இலக்கியம், நுண்கலைகள், அறிவியல் போன்றன யாவும் ஆக்கக் கற்பனைகளின் விளைவுகளேயாம்
    ஆ) முன்னர் நாம் அனுபவித்த நிகழ்ச்சியொன்றினை மீண்டும் நமது மனக்கண்கொண்டு நோக்குதல் மீள் ஆக்கக் கற்பனையாகும்.
    இ) கற்பனை இரு வகைப்படும்.
    ஈ) ஆனால் பழைய அனுபவங்களின் பிம்பங்களைப் புதிய முறையில் நாம் தொகுத்து அமைப்போமாயின் அது ஆக்கக் கற்பனையாகும்.
    உ) அவை மீள் ஆக்கக் கற்பனை, ஆக்கக் கற்பனை் என்பனவாகும்.
    1) ஆ, ஈ, இ, உ, அ 2) இ, உ, ஆ, ஈ, அ
    3) இ, உ, ஈ, ஆ, அ 4) இ, உ, அ, ஈ, ஆ

## தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி II

01. பின்வரும் வினாக்களிற்கு விடைதருக.
    1) தண்ணீர், வெற்றிலை என்பவற்றைப் பிரித்தெழுதுக.
    2) தொகை நிலைத் தொடர் என்றால் என்ன? உதாரணம் தருக.
    3) வர்ணனைக் கட்டுரை என்றால் என்ன?
    4) உவமையணியின் நான்கு பகுதிகளும் எவை?
    5) இரண்டாம் வேற்றுமையின் உருபு, பொருள் என்பனவற்றைத் தருக.
    6) கருவி வேற்றுமை என்று எத்தனையாம் வேற்றுமையைக் குறிப்பிடுவர்?
    7) “கடிமாலை சூடினாள்” இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள உரிச்சொல் யாது? என்ன பொருளில் வந்துள்ளது?
    8) விழுந்தவனை என்பது எவ்வகைப் பெயர்?
    9) கடிதத்தின் மூன்று வகைகளும் எவை?
    10) தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன? உதாரணம் தருக.
02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.
    அ) இன்று வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துவிட்டன. இச் சாதனங்கள் மக்களுக்குப் பல்வேறு வகைகளிலும் பயன்படுவதோடு அதனால் சில தீமைகளும் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகின்றது என்பதை விளக்கும் விளக்கக் கட்டுரை.





# கே.ஜே.யேசுதாஸின் 50 ஆண்டு சாதனை!

கர்நாடக சங்கீத இசை மேதையும், பிரபல பின்னணிப் பாடகருமான, கே.ஜே. யேசுதாஸ் திரைத் துறையில் பாடகராக அறிமுகமாகி 50 ஆண்டு காலத்தை நிறைவு செய்துள்ளார். திரைப் படத்துறையில் இது மிகப் பெரிய சாதனையாக போற்றப்படுகிறது.

கே.ஜே.யேசுதாஸ் ஒரு பாடகராக அறிமுகமாகி 14.11.11 திகதியுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. 1961 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி கல்பாடுகள் என்ற மலையாள படத்திற்காக தனது முதல் பாடலை பாடினார். அப்போது தொடங்கிய தனது இசைப் பயணத்தை இப்போதும் தனது 71 வயதிலும் தொடர்கிறார். 1964 இல் தமிழில் பொம்மை படத்தில் அறிமுகமானார். மலையாளம், தமிழ, தெலுங்கு, கன்னடம், இந்தி. பெங்காலி, ஒரியா, குஜராத்தி, துலு, மராத்தி, ஆங்கிலம், ரஷ்யன் உள்ளிட்ட 14 மொழிகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி சாதனை புரிந்துள்ளார்.

தெய்வீகப் பாடகர் எனப் போற்றப்படும் யேசுதாசுக்கு கலை மற்றும் கலாசாரத்தில் தன்னிகரற்ற பங்களிப்பிற்காக இந்திய அரசின் பத்மஸ்ரீ, பத்மபூஷண் விருதுகள் கிடைத்துள்ளன. 7 முறை தேசிய விருதும், 17 முறை மாநில விருதும் பெற்றுள்ளார்.

இவரது இளையமகன் விஜய் யேசுதாஸ் தற்போது புகழ்பெற்ற பின்னணி பாடகராக உருவெடுத்துள்ளார்.




# டைனோசர் செல்போன்

செல்போன்களில் புதுமையைப் புகுத்த ஒவ்வொரு நிறுவனமும் போட்டி போட்டுக் கொண்டேயிருக்கிறது. இதோ மற்றுமொரு புதுமை, அப்பிள் நிறுவனம் ஐபோட் செல்போன் வகையில் புதிய ரகத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதில் அப்படி என்ன விசேஷம்? டைனோ சரின் எலும்பைக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதுதான் விசேஷம். மொத்தம் 3 கிலோ எடையுள்ள இந்தச் செல் போனின் ஓரங்கள் 2 கிலோ எடையுள்ள, 24 காரட் தங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் அந்தத் தங்கத்தில் வைரக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. செல்போனின் பின்புறத்தில் உள்ள அப்பிள் சின்னத்தில் மட்டும் 52 வைரக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் இளைஞர் ஒருவரால் இந்தச் செல்போன் வடிவமைக்கப்பட்டுள்ளது. வெறும் இர்ண்டு செல்போன்கள் மட்டுமே இந்த ரகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒரு செல்போன் ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்டுவிட்டது. யார் அதனை வாங்கினார்கள் என்பதை நிறுவனம் ரகசியமாக வைத்துள்ளது. இன்னொன்று விற்பனைக்கு உள்ளது. உங்களிடம் பணம் இருந்தால் தாராளமாக வாங்கலாம். விலை அதிகமில்லை, சுமார் 90 கோடி ரூபா அளவில் வரும்!

# ஜாக்கி சான் 100வது படம் "1911"




அது, ஏப்ரல் 7 ஆம் திகதி. ஆண்டு 1954. அன்றையதினம் பிறந்த அந்தக் குழந்தையை மருத்துவர் வியப்புடன் பார்த்தார். எடை 12 இறாத்தல். எப்படியாவது அக்குழந்தையை தான் வளர்க்க வேண்டுமென்று அந்த மருத்துவர் விரும்பினார். குழந்தையின் பெற்றோரிடம் கேட்கவும் செய்தார். ஆனால், சார்ள்ஸ் சானும் சரி, லீ-லீயும் சரி அதற்குச் சம்மதிக்கவில்லை.

இத்தனைக்கும் சார்ள்ஸ் சான், ஒரு சமையல் காரர், லீ-லீ, வீட்டு வேலைகளை செய்பவர். போதிய வருமானம் ஒருபோதும் வந்ததில்லை. ஆனாலும் தங்கள் குழந்தையை தாங்களே வளர்கக விரும்பினார்கள். சான் கொங்-கொங் என நாமகரணமும் சூட்டினார்கள். "ஹொங்கொங்கில் பிறந்தவன்" என்பதுதான் அப்பெயரின் அர்த்தம்.

சான் கொங்-கொங்குக்கு படிப்பு ஏறவில்லை. சார்ள்ஸ் கானுக்கும், லீ-லீக்கும் அவுஸ்ரேலியாவில் வேலை கிடைத்தது. அதே சமையல், வீட்டு வேலைதான். எனவே தங்கள் மகனை "சைனா ட்ராமா ஸ்கூல்" என்ற பாடசாலையில் சேர்த்துவிட்டு அவுஸ்ரேலியா புறப்பட்டார்கள். அப்போது சான் கொங்-கொங்குக்கு வயது 7.

இந்தப் பள்ளியில்தான் சான் கொங்-கொங், கராத்தே, குங்ஃபூவில் ஆரம்பித்து சகல மார்ஷல் கலைகளையும் பயின்றான். அக்ரோபற்றிக்ஸ் உடற்பயிற்சிகளை மேற்கொண்டான். சீனாவில் ஒபரா எனப்படும் மேடை நாட்டிய நிகழ்ச்சிகள் நடிப்பு, பாடல்களுடன் அக்ரோபற்றிக்ஸ் உடற்பயிற்சிகளும் ஒன்று கலந்த வடிவம். "பீகிங் ஒபரா" இதில் தலைசிறந்து விளங்கியது. இக்குழுவுக்கு தேவையான நபர்களை பயிற்றுவித்து தருவது தான் "சைனா ட்ராமா ஸ்கூலின்" பணி.

இப்பள்ளியில் சான் கொங்-கொங், ஒரு நாளைக்கு 18 மணி நேரங்கள் வரை பயிற்சி எடுததான். அவனது ஆர்வத்தை பார்த்த பள்ளி, 8 வயதில் "பிக் அண்ட் லிட்டில் வாங்டின்" படத்தில் நடிக்கும் வாய்ப்பை வழங்கியது. அப்படத்தில் சான் கொங்-கொங தன் திறமையை வெளிப்படுத்தினான்.

தொடர்ந்து நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. பள்ளியல் பயிற்சி பெற்ற படியே நடித்தான். 19 வயதில் ப்ரூஸ் லீ நடித்த "என்டர் தி டராகன்" படத்தில் சிறு வேடம் கிடைத்தது. அதில் முத்திரை பதித்தான்.

ஆனால், அடுத்தடுத்து வாய்ப்புகள் கிடைக்கவில்லை. எனவே அவனை அவுஸ்ரேலி யாவுக்கு வரும்படி அவனது பெற்றோர் அழைத்தனர்.

அங்கு சென்று சான் கொங்-கொங், கட்டிட வேலையில் நாள் கூலி அடிப்படையில் பணிபுரிந்தான். அவனது உருவத்தையும், துள்ளலையும் பார்த்த சக தொழிலாளர், அவனை "லிட்டில் ஜாக்" என்று அழைத்தனர். அதுவே "ஜாக்கி" என சுருங்கியது.

ஒரு நாள் - வில்லி சான் என்ற தயாரிப்பு நிர்வாகியியிடமிருந்து உடனடியாக ஹொங்கொங் புறப்பட்டு வரும்படி தந்தி வந்தது. "ஜாக்கி சான்" ஆக பெயர் மாறிய சான் கொங்-கொங், நம்பிக்கையுடன் சென்றான். "ஃபிஸ்ட் ஒஃப் ஃபியுரி" படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்து. அப்போது சான கொங்-கொங் என்கிற ஜாக்கிசானுக்கு வயது 21.

அதன் பிறகு நடந்தது அனைத்தும் சரித்திரம். ஸ்டண்ட் மாஸ்டர், கதாசிரியர், திரைக்கதையாளர், இயக்குனர், தயாரிப்பாளர் என இடைப்பட்ட காலத்தில் பல முகங்களில் தன் திறமையை வெளிப்படுத்தியிருக்கும் ஜாக்கி சானுக்கு, இப்போது வெளிவர இருக்கும் "1911" படம் நூறாவது படம்.

உழைப்புக்கு பொருள்தரும் வாழ்க்கை ஜாக்கி சானுடையது.

- கே.என்.சிவராமன்



# பரிஸில் பரிதிமீது தாக்குதல்: புலிகளின் அதிகாரப் போராட்டம்

- டி.பி.எஸ்.ஜெயராஜ்

பிரான்சிய புலிகளின் மூத்த தலைவரான பரிதியின் மீது ஒக்டோபர் 30 ஆம் திகதி பரிஸில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இரவுநேரத் தாக்குதல், புலம்பெயர் இலங்கைத் தமிழர் அரசியலைத் தற்போது துன்புறுத்தும் ஒரு கொடிய நோயின் அறிகுறியாக உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கட்டமைப்பானது தற்சமயம் இயக்கத்தின் பலம் பொருந்திய முன்னணி தலைவர்களிடையே ஏற்பட்டிருக்கும் ஒரு அதிகாரப் போராட்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பாரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் இந்த உடன் பிறப்பு கொலைகளைப் புரியத்தூண்டிய கோஷ்டி மோதல்களின் விளைவே.

பரிதியும் மற்றும் அவரது உதவியாளர்கள் இருவரும் பாரீசில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்பு குழு (ரி.சீ.சீ.) அலுவலகத்தை விட்டு வெளியேறி வெளியே நிறுத்தப்பட்டிருந்த அவர்களது வாகனத்தை நோக்கிச் செல்லும்போது ஆறுபேரைக் கொண்ட குழுவொன்று அவர்களைச் சூழ்ந்து கொண்டது. அவர்களில் மூவர் மலையேறுபவர்கள் அணியும் கம்பளித் தொப்பி போல தலையை முற்றாக மூடி முகத்தின் பாகங்களில் கண்களையும் வாயையும் மட்டுமே வெளிக்காட்டும் துணியினால் செய்யப்பட்ட முகமூடியை அணிந்திருந்தனர். அவர்கள் கையில் ஆயுதங்களை வைத்திருந்ததுடன் அவற்றை உபயோகிக்கவும் தொடங்கினர்.

மற்ற மூவரும் வெறுமனே அதைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் இருவர் பாரீசில் இருந்த முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் என்று பரிதி அடையாளம் காட்டியுள்ளார். தாக்கியவர்களின் நோக்கம் பரிதியை கொல்வதில் இல்லாமல் அவரது உடலில் காயங்களை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

பரிதியைத் தாக்கியவர்கள் இரும்பு பொல்லுகளை பாவித்தது மட்டுமல்லாது கட்டான எனப்படும் யப்பானிய சமுராய் வாளையும் பயன்படுத்தினார்கள். இந்த கட்டான எனப்படும் வாள் வட்டமான அல்லது சதுரமான தற்காப்பு நிலையைக் கொண்டதும், இரண்டு கைகளாலும் பயன்படுத்தக் கூடியவாறு நீண்ட பிடியுடன் கூடியதும் மிதமான வளைவுடன் உள்ள மெல்லிய ஒற்றை முனைக் கத்தி. அதன் கூரான அலகின் நீளம் வழக்கமாக 60 சென்ரிமீற்றர் அல்லது 23.6 அங்குலமாகும்.

தாக்குதலாளிகள் சமுராய் வாளினால் பரிதியை வெட்டியதுடன் இரும்பு பொல்லுகளாலும் சில அடிகளை அடித்துள்ளனர். இவரது இரண்டு உதவியாளர்களையும் பொல்லுகளால் தாக்கியுள்ளனர். ஆனால் வாளினால் வெட்டவில்லை. பரிதி ஆழமான வெட்டுக்களைத் தாங்கியுள்ளதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 27 தையல்கள் போடப்பட்டுள்ளன.

பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது மிகத் தீவிரமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது, ஏனெனில் அவர் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பில் ஒரு உயர்ந்த பதவித்தரத்தைக் கொண்டவரும் பிரான்சிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்கு பல வருடங்களாக தலைமையேற்றிருந்தவரும் ஆவார். நடராஜா மதீந்திரன் என்ற இயற் பெயரைக் கொண்ட பரிதி, றீகன் என்ற பெயராலும் அழைக்கப் படுகிறார். இவரை பிரான்சிய அதிகாரிகள் கைதுசெய்து ஒரு குறிப்பிட்ட காலம்வரை சிறைத்தண்டனை பெற்றதால் இவர் தலைமைப் பதவியிலிருந்து வெளியேறவேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்.

தனக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ள பரிதி தற்போது பிணையில் வெளியே வந்துள்ளார். நீதிமன்றின் முன்னால் அவரது வழக்கு நிலுவையில் உள்ளதால், பரிதி பிரான்சின் சட்டரீதியான புலித்தலைவராக இருப்பதை பெயரளவில் நிறுத்திக் கொண்டார், இருந்தபோதிலும் அவர் தொடர்ந்து அரசியல் ரீதியாக சுறுசுறுப்பான செயற்பாட்டாளராக இயங்கியதால் பிரான்சில் எல்.ரீ.ரீ.ஈ யின் உண்மையான தலைவராக மதிக்கப்பட்டார்.

வெளிநாட்டு புலிகளின் உள்ளகப் போட்டியில் தாக்குதலுக்கு இலக்கான மிகவும் சிரேட்ட தலைவர் அவர்தான் என்பதால் பரிதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணியில் ஒரு தீவிர வளர்ச்சி இருக்கிறது. இதேபோன்ற பல தாக்குதல்கள் வேறுபல இடங்களில் நடைபெற்றிருக்கிறது ஆனால் பாதிக்கப்பட்டவருக்கு இயக்கத்தில் உள்ள சிரேஷ்ட தலைமைத்துவத்தை வைத்துப் பார்க்கும்போது பரிதி மீதான தாக்குதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கணிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் தன்மை மற்றும் நோக்கம் என்பன வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ யினரிடையே உள்ள அதிகாரப் போராட்டத்தை வெகு சிறப்பாக விளக்குகின்றன. இரண்டு மூத்த புலி செயற்பாட்டாளர்களுக்கு தமது விசுவாசத்தை உறுதிப்படுத் தும் இரண்டு பரந்த பிரிவுகள் அங்குள்ளன. ஒன்று நோர்வேயை தளமாகக் கொண்டியங்கும் பேரின்பநாதன் சிவபரன் என்கிற நெடியவன். மற்றது பிரான்சு மற்றும் ஜேர்மனியில் இருந்து இயங்கிவரும் சேகரம்பிள்ளை வினாயகமூர்த்தி அல்லது விநாயகம் என்பவர்.

தற்பொழுது புலம்பெயர் தமிழரிடையே இடம்பெறும் இந்த புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் பற்றி விளங்கிக் கொள்ள ஸ்ரீலங்காவில் எல்.ரீ.ரீ.ஈயின் வீழ்ச்சிக்குப் பின் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றிய சுருக்கமான ஒரு மறுபார்வை அவசியமாகிறது.

(தொடரும்....)

# சென்னையில் பொதுமக்கள் மீது இனந்தெரியாத நபர் துப்பாக்கிச் சூடு

இந்தியச் செய்திகள்

(சென்னை)

நள்ளிரவில் காரில் வந்த அடை யாளம் தெரியாத நபர் ஒருவரால் பொதுமக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் தீவிரவாதியா என்பது குறித்து காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சென்னை கே.கே.நகர் அருகில் உள்ள நெசப்பாக்கத்தில் உள்ள ஒரு கணினி நிலையத்திற்கு அருகே நள்ளிரவில் காரில் வந்த அடை யாளம் தெரியாத நபர் ஒருவர் அங்கி ருந்த வாகனம் மீது மோதியுள்ளார்.

இதை தட்டிக் கேட்ட பொதுமக் களை காரில் வைத்திருந்த துப் பாக்கியால் சுட்டுள்ளார் அந்த மர்ம நபர். இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

குறித்த நபரை பொதுமக்கள் விரட்டிப் பிடிக்க முயன்ற போது துப்பாக்கி யால் சுட்டபடி மர்ம நபர் காரில் ஏறி தப்பிச் சென்றுள்ளார்.

இது பற்றி தகவல் அறிந்த கே.கே.நகர் காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு காரில் தப்பிச் சென்ற நபர் தீவிர்வாதியா? அல்லது வெளிமாநிலத்தைச் சேர்ந்தவரா? என்பது குறித்து காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# குழந்தைகளை மகிழ்வித்த விமான சேவை நிறுவனம்



(சென்னை)

இந்தியாவின் முதல் பிரதமர் நேருவின் பிறந்த தினம் (நவம்பர் 14) ஆண்டுதோறும் குழந்தை கள் தினமாகக் கொண்டாடப்படு கிறது. இதற்காக ஜெட் ஏர் வைஸ் விமான நிறுவனம் மும்பை யிலிருந்து குஜராத்தின் பவநகர் வரை 80 க்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளை விமானத்தில் அழைத்துச் சென்றது.

விமானத்தில் பறக்கும் அனுபவத்தை சமூகத்தின் கீழ் நிலையில் உள்ள குழந்தை களும் பெறுவதற்காக இந்த ஏற்பாட்டை அந்த நிறுவனம் செய்திருந்தது. முன்னதாக அந்தக் குழந்தைகளை மகிழ்விப்பதற்காக கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

இதுகுறித்து குழந்தைகள் கூறியதாவது, 38 ஆயிரம் அடி உயரத்தில் மேகக்கூட்டங்களுக்கு இடையே பறந்தது மறக்க முடியாத அனுபவமாக இருந்தது என விமானத்தில் பயணம் செய்த குழந்தைகள் தெரிவித்தனர். விமானத்தில் பறக்க வேண்டும் என்ற தங்களின் வாழ்நாள் கனவு நனவாகி விட்டதாகவும் அந்தக் குழந்தைகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை மாவோயிஸ்ட்டுக்கள் இணக்கம்

(சென்னை)

இந்திய மேற்குவங்கத்தில் மாவோயிஸ்டுக்கள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தச் சம்மதம் தெரிவித்துள்ளனர். அதுவரை மோதல்களை நிறுத்தி வைப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் மேற்குவங்க மாநிலத்தில் “ஜங்கிள் மஹால்” என்று அழைக்கப்படும் மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் அதிகம் உள்ள பகுதிகளில், வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வந்தன. பழங்குடியினர் மற்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொலை செய்யப்படுவதும், கொரில்லாத் தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்களும் இடம்பெற்றன. மேற்கு வங்க மாநில முதல்வராக மம்தா பானர்ஜி பொறுப்பேற்றதும் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்.

மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை களைந்துவிட்டு சரணடையும் படி கடந்த மாதம் கெடு விதித்திருந்தார். எனினும் அவர்கள் மறுத்துவிட்டனர். கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு மாதத்திற்கும் மேலாக மாவோயிஸ்டுகள் அறிவித்த போர் நிறுத்தம் ஒக்டோபர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடத்திட்டத்தில் பகவத் கீதை

(சென்னை)

மாநில பள்ளிகளின் பாடத்திட்டத்தில் பகவத் கீதை சேர்க்கப்படும் என்று மத்திய பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். ஆர்.எஸ்.எஸ் சார்பில் சரஸ்வதி வித்யா பிரதிஸ்தான் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தலைமை விருந்தினராக முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் கலந்து கொண்டார்.

அதில் அவர் பேசியதாவது, பகவத் கிதையைக் கற்றுக் கொடுப்பதில் தவறு ஏதுமில்லை. அதற்காக பகவத் கீதையை பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்க அரசு முடிவு செய்துள்ளது. அதேபோல் தேசிய மொழியான ஹிந்தி மொழியை ஊக்கு விக்கவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட இருப்பதாகவும் முதல்வர் தெரிவித் தார்.


# இதய அஞ்சலி



அமரர்

## சங்கரப்பிள்ளை சிவதாசன்

(முன்னாள் வடக்கு -கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினரும், பனை அபிவிருத்திச் சபையின் தலைவரும்)

பனை அபிவிருத்திச் சபையின் வளர்ச்சியிலும்
பணியாளர்களின் உயர்ச்சியிலும்,
பனைவளம் சார்ந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை
உயர்த்துவதிலும் பகல், இரவு பாராது உழைத்த
உத்தமரின் மரணச் செய்தி கேட்டு
நாம் ஆழ்ந்த கவலை அடைவதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும்
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம்
21.08.1934

மறைவு
13.11.2011

தலைவர்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
பனை அபிவிருத்திச் சபை

(C/1083)

உலகச் செய்திகள்

# யுனெஸ்கோவின் நிதிப் பற்றாக்குறை தீர்ப்பதற்கு கட்டார் உதவிக்கரம்


யுனெஸ்கோவின் கல்வித் திட்டங்களுக்கான நிதியுதவியை அதிகரிக்கப் போவதாக கடடார் நாடு அறிவித்துள்ளது.

பாலஸ்தீனத்திற்கு முழு உறுப்பினர் அந்தஸ்தை யுனெஸ்கோ சமீபத்தில் அறிவித்தது. இதையடுத்து அமெரிக்காவும், இஸ்ரேலும் தங்களது நிதியுதவியை நிறுதப் போவதாக அறிவித்தன. இதனால் யுனெஸ்கோவின் கல்வித் திட்டங்களுக்கான பட்ஜெட்டில் 6.5 கோடி டொலர் துண்டு விழுந்தது.

இக்கல்வித் திட்டங்கள் ஐ.நா.வின் மிலேனியம் மேம்பாட்டு இலக்குத் திட்டத்தின் கீழ் செயற்படுபவை. இந்நிலையில் யுனெஸ்கோவின் நிதிப் பற்றாக்குறையைத் தீர்க்க கட்டார் முன்வந்துள்ளது.

கட்டார் மன்னரின் மனைவி மூசா பின் நசீர் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், நிதியுதவி நிறுத்தப்பட்டது குறித்து வருத்தம் தெரிவித்துள்ளார். மிலேனியம் இலக்கு 2015இல் நிறைவேற்றப்பட வேண்டிய நிலையில்,தனது குறிக்கோளுக்கு அனைத்து உறுப்பினர் நாடுகளும் ஆதரவு தரும்படியும் அவர் கோரியுள்ளார். புத்தாயிரம் இலக்கின் தொடக்கக் கல்விப் பிரிவின் சிறப்பு ஆலோசகராக மூசா பின் நசீர் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எச்சரிக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா



ஈரானுக்கு எதிராக தேவைப்பட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்தார். ஹவாய் தீவில் ஹோனலுாலுா நகரில் நடைபெறும் ஆசிய-பசிபிக் உச்சி மாநாட்டில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார். ஈரான் அணுஆயுதங்களைத் தயாரிப்பது வளைகுடா பிராந்தியத்துக்கு மட்டும் அல்ல, அமெரிக்காவுக்கும் மிகப் பெரிய சவாலாக அமையும். இந்த விவகாரத்தில் அந்த நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டிருப்பது பல்வேறு விமர்சனங்களை எழுப்பியுள்ளது. இது தொடர்பாக பெரும்பான்மை நாடுகளின் ஆதரவைப் பெற அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்திவருகிறது.

ஈரான் ஆணுஆயுத நாடாக உருவெடுத்தால் எதிர்காலத்தில் நிகழக்கூடிய ஆபத்துகளை ரஷியாவும், சீனாவும் புரிந்துக் கொள்ளும் என நம்புகிறேன் என்று அவர் மேலும் கூறினார். ஈரானின் அணுகுண்டு தயாரிக்கும் திட்டம் குறித்து சர்வதேச அணுசக்தி முகமை வெளியிட்டுள்ள அறிக்கை உச்சி மாநாட்டில் உறுப்பு நாடுகளின் தலைவர்களிடம் அளிக்கப்பட்டது. இதற்கு ஆதாரமாக செயறகைக்கோள் படங்கள், கடிதப் பரிமாற்றங்கள் ஆகியவையும் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

ஈரான் மீது மேலும் சில பொருளாதார தடைகளை விதிக்க அமெரிக்க திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக மாநாட்டில் பங்கேற்றுள்ள ரஷிய அதிபர் திமித்ரி மெத்வதேவ், சீன அதிபர் "ஹு ஜிண்டாவ் ஆகியோரின் ஆதரவைப் பெற ஒபாமா மேற்கொண்ட முயற்சிகள் போதிய பலன் அளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

ஈரான் மீது ஐ.நா. சபை விதித்துள்ள பொருளாதார தடையால் அந்த நாடு பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. எனினும், அணு ஆயுதத் திட்டத்தை கைவிடாமல் ஈரான் முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்லோ நீதிமன்றத்தில் ப்றிவிக் பகிரங்க விசாரணையில்



நோர்வேயின் வரலாற்றில் கறைபடிந்த தாக்குதலை நடத்திய அன்டேர்ஸ் பெஹ்ரிங் ப்றிவிக், பகிரங்கமாக மக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலரின் முன்னிலையில் நீதிமன்றத்தில் முதல் தடவையாக முன்னிலைப்படுத்தப்பட்டார். இதற்கு முன்னர் நடைபெற்றிருந்த வழக்கு விசாரணைகள் பகிரங்கமாக நடைபெறவில்லை என்பதுடன் வெளியாட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

நோர்வேயில் நடைபெற்றிருந்த இளைஞர் மாநாடு ஒன்றில் இவர் துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தி 77 பேரின் உயிர்களை கொலை செய்து, மக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியிருந்தார்.

# சிரியா ஜனாதிபதி பதவி விலக வேண்டும் வலியுறுத்துகிறார் ஜோர்டான் மன்னர்



நாட்டின் நலன் கருதி சிரியா ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று ஜோர்டான் மன்னர் வலியுறுத்தியுள்ளார். சிரியாவில், ஜனாதிபதி பஷர் அல் அசாத்திற்கு எதிரான போராட்டங்கள் கடந்த எட்டு மாதங்களுக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றன.

இந்த போராட்டங்களில், இராணுவ வன்முறைக்கு, 3,500 பேர்வரை பலியானதாக ஐக்கிய நாடுகள் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. தற்போது அரபு லீக்கில், சிரியாவின் உறுப்பினர் அந்தஸ்து ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரபு லீக் ஒப்பந்தத்தை சிரியா அமுல்படுத்தாவிட்டால், சிரியா மீது பல பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அரபு லீக் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரபு லீக்கின் இந்த நடவடிக்கையால் சிரிய ஜனாதிபதி அசாத்தின் ஆதரவாளர்கள் சினமடைந்துள்ளனர். இந்த நிலையில் அரபு லீக் நாடுகள் வலியுறுத்தியும் கூட பிடிவாதம் காட்டமால், நாட்டின் நலனுக்கான ஜனாதிபதி பஷர் அல்-அசாத் பதவி விலக வேண்டும் என்று ஜோர்டான் மன்னர் அப்துல்லா வலியுறுத்தியுள்ளார். ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். உடனே எதிர்க்கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டில் அமைதி நிலவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தலிபான் செய்தித் தொடர்பாளர் கைது?

தாலிபான் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் ஜபியுல்லா முஜாகித் பிடிபட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தான் எல்லையையொட்டி அமைந்துள்ள பக்டிகா மாகாணத்தின் சா ஹவ்ஸா மாவட்டத்தில் கூட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது பிடிபட்டவர்களில் ஜபியுல்லாவும் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.


தாலிபான் இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தொடர்பாளர்கள் இருவரில் முஜாகிதும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## துருக்கியில் நில நடுக்கம்

துருக்கியின் மேற்கு பகுதியில் உள்ள வான் மாகாணத்தில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.2 பதிவாகி உள்ளது என காண்புலி புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்த மாதம் இதே வான் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 600க்கும் மேற்பட்டவர்கள் பலியானர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மெய்தான் பாருங்கோ...

## வரட்டுக்கௌரவங்கள்



நாட்டில சண்டை முடிஞ்சு சமாதானம் வந்திட்டுது எண்டு சொன்னாப் பிறகு சில அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெறுகிறதல்லோ அதில உந்த வீதியள், றோட்டுகள், ஒழுங்கையள் எண்டு முக்கியமானதுகளை சீர்படுத்த வேலைகளும் நடக்குதுதானே.

முந்திப் பொருளாதாரத்தடை விதிச்ச நேரம் உந்த ஏ-நைன் றோட்டால ஒரு வாகனங்களும் வாறேல்லை. சாமான் சக்கட்டுகளும் வரத்தில்லை. அரசாங்கம் புலியளை ஒடுக்கிறதிலும், புலியள் தனிநாடு அமைக்கிறதிலும் கண்ணாயிருந்து சண்டை பிடிச்சவையே ஒழிய, சனத்தைப்பற்றி நாட்டின்ர அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திக்கேல்லை.

றோட்டுக்கு ஊத்துற தார்ப்பெறலுகள், சல்லிக்கல்லுகள், அதை நெரிக்கிற வாகனங்கள் ஒண்டும் இல்லாததால எங்கட பகுதி றோட்டுகள், தெருவுகள் படு அலங்கோலமாப் போச்சுது பாருங்கோ.

இதைவிட ஷெல்லுகள் விழுந்து கிபிர் குண்டுகள் போட்டதாலையும் அநேகமான றோட்டுகள் குண்டும், குழியுமாப் போய்க் கிடந்தது. இப்ப சண்டை முடிஞ்சாப்போல பாதை திறபட்டுப் பல அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களுக்குத் தேவையான பொருளுகள் எல்லாம் வரத் தொடங்கியிட்டுது தானே.

உதில இந்த வீதி அபிவிருத்தியும் அடங்குது கண்டியளே! முக்கியமான வீதியள் யாழ்ப்பாணத்தில் அகலிச்சு, தார் ஊத்தி போக்குவரத்தை இலகுவாக்கியிருக்கினம். இப்ப ஏ-நைன் றோட்டில வேலை நடக்குது. இஞ்சால பரந்தனிலயிருந்து புதுக்குடியிருப்பு வரைக்கும் வேலை நடந்து கொண்டிருக்குது.

ஆனா, உந்த வீதி அகலிப்பு நடவடிக்கையள்... வேலையளைப் பாத்து சிலபேர் தங்கட முகத்தை மூஞ்சூறு மாதிரி உம்... மெண்டு வைச்சுக்கொண்டு தங்களுக்குள்ள புழுங்கி அவியினம்...

பின்ன இருக்காதே! ஹி.... ஹி.... ஹி...... ஹி.........ஹி எங்கட சனத்தைப்பற்றி எங்களைப்பற்றி என்ன நினைக்கிறியள்?

அரைப்பரப்புக் காணிக்குள்ள ஆறேழு வேலியளைப் போட்டு அண்டை அயலுகளோடை கொழுத்தாடு பிடிச்சு, கோடு கச்சேரியெல்லாம் ஏறி, அதுக்குச் சிலவழிக்கிறதுக்கு இன்னொரு காணியை ஈடுவைச்சு கோர்ட்டில வழக்காடி வெலலுற எங்கட கௌரவப் பெருமைகள் எங்களுக்குள்ள இருக்கேக்கை, றோட்டுப் பக்கம் ஒண்டரை முழுக் காணித்துண்டை வீதி அகலிப்புக்கு விட்டுக்கொடுக்க மனம் வருமே எங்களுக்கு ஹி.....ஹி.....ஹி... எங்களைப் பற்றி என்ன நினைச்சுக் கொண்டிருக்கினம் உந்த அரசாங்கக்காரர்?

இல்லைத் தெரியாமல் தான் கேட்கிறன். எங்களைப் பற்றி என்ன நினைக்கினம்? தனிநாடு காண வெளிக்கிட்டு அதுக்கு எல்லை போட வீட்டுக்கொருவர் நாட்டுக்காக விரைந்து வாரீர்... எண்டு தெருத் தெருவா பரப்புரை செய்யேக்கை, நாங்கள் எங்கட காணி எல்லையை அடுத்த வீட்டுக்காரன் பிடிச்சிடுவானோ எண்ட பயத்தில, காணி, பூமி இல்லாமல், இருக்க இடமில்லாமல் திரிஞ்சவன்ர பிள்ளையளைப் பார்த்து 'நீங்கள் முன்னுக்குப் போங்கோ! நாங்கள்!பின்னால வாறம்... எண்டு சொன்ன ஆட்களெல்லோ நாங்கள்!

இப்ப இயக்கம் விழுந்தாப்போல உந்த வீதி விசாலிப்பு அகலிப்பு வேலையளுக்காக ஒரு முழத்துண்டை விட்டுக்குடுக்க மனம் வருமே எங்களுக்கு? ஹி......ஹி.....ஹி...

எங்கட அடுத்த சந்ததி சுதந்திரமா வாழவேணும்... எண்டு நினைச்ச அளவுக்கு அதுகள் சௌகரியமா வாழவேணுமெண்டு நாங்கள் நினைக்கேல்லை. எங்கட தலைமையள் எங்களைப் பகடைக்காய்களா வைச்சு அரசியல் நடத்திச்சுதுகளேயொழிய, எங்கட பக்கத்து அபிவிருத்திக்கான முன்னெடுப்புக்களைச் செய்ய முனையேல்லை. வேதாளம் பழையபடி முருங்கைமரத்தில ஏறின மாதிரி இப்பவும் உந்தச் சில்லெடுப்பு வேலையள் தானே நடந்து கொண்டிருக்குது பாருங்கோ.

காதற்ற ஊசியும் வராது கடைசிவரை.. எண்ட பட்டினத்தாருடைய பாட்டையும், கதையையும் படிச்சுப்போட்டு, இப்பவும் காணி பூமிக்கு அடிபடுகிற எங்கட பூர்வீக வரட்டுக்கௌரவத்தைப் பற்றி ஒரு வரலாறே இருக்குது பாருங்கோ.

'இன்றிருப்பார் நாளையில்லை. நாளை வருவார் எப்படியோ...? எண்ட விளக்கம் தெரியாமல் இப்பவும் நாங்கள் இருட்டுக்குள்ள இருந்து அடிபடுகிறம் கண்டியளே!

உலகம் அறிவியலிலும், ஆக்க பூர்வமான தேடலிலும் போய்க் கொண்டிருக்க, நாங்கள் ஒருமுழத் துண்டுக்கு உணர்ச்சிவசப் படுகிறம். விட்டுக்கொடுத்தவன் கெட்டுப்போனதில்லை. கெட்டுப் போறவன் விட்டுக் கொடுத்ததில்லையெண்டு சொல்லுறமாதிரி... நாங்கள் இன்னமும் கெட்டுப்போறதுக்குத்தான் விட்டுக் கொடுக்காமல் எல்லா விசயத்துக்கும் அடம் பிடிச்சுக் கொண்டுஇருக்கிறம்.

வழிவழியாப் பாதுகாத்துக் கொண்டு வாற உந்த வரட்டுக் கௌரவங்களைத் தூக்கி எறிஞ்சுபோட்டு, தெளிவாச் சிந்திச்சமெண்டால், எங்களுக்கும், நாங்கள் வாழுற பகுதியளுக்கும் ஒரு வளமான எதிர்காலம் புலப்படுமல்லோ! இனியாவது சிந்திப்பமே?

- சின்னக்குட்டி சின்னச்சாமி

# தோழர் சிவதாசன் அவர்களின் மறைவிற்கு கனடியத் தோழர்களின் அஞ்சலி!

நீண்டகால இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளரும், தொழிற்சங்கத் தலைவருமான தோழர் எஸ்.சிவதாசன் அவர்கள், 2011 நவம்பர் 13ஆம் திகதி தமது 77ஆவது வயதில் காலமான செய்தி கேட்டு, கனடாவில் வாழ்கின்ற இலங்கையைத் தாயகமாகக் கொண்ட அனைத்து முற்போக்கு சக்திகளும் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளோம்.

தோழர் சிவதாசன் தனது மாணவப் பருவத்திலேயே இலங்கையின் கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டவர். கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக, அவர் அந்த இயக்கத்தின் கொள்கைகளில் நிலை தழும்பாது நின்று வந்துள்ளார். தேசிய இனப்பிரச்சினை தீவிரமடைந்து, அது ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்த காலகட்டத்தில், அவர் சில முற்போக்குத் தமிழ் தேசியவாத இயக்கங்களுடன் தன்னை இணைத்து வேலை செய்தாராயினும், அங்கும் தமது இடதுசாரிக் கொள்கைகளின் அடிப்படையிலேயே செயற்பட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்க இயக்கத்தில் அவர் ஆற்றிய பங்குப்பணி மகத்தானதாகும். திருகோணமலையில் அவர் தொழிற்சங்கப் பிரதிநிதியாக இருந்த காலத்தில், அங்கு துறைமுகத் தொழிலாளர்களை அமைப்புரீதியாகத் திரட்டுவதிலும், அவர்களது கோரிக்கைகளை வென்றெடுப்பதிலும் முக்கியமான பங்களிப்பை வழங்கினார். அக்காலகட்டத்தில், அங்கு கட்சி மற்றும் சமூகப் பணிகளையும் முன்னெடுத்தார். குறிப்பாக, அங்குள்ள அரச ஊழியர்கள் மத்தியில் செல்வாக்கு மிகுந்த ஒருவராகத் திகழ்ந்தார்.

அதன்பின்னர், அவர் 1960களின் நடுக்கூறில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தொழிற்சங்கப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பின்னர், வட பிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை, காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, வல்லை நெசவாலை, ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலை போன்ற இடங்களில் செயற்பட்டுக் கொண்டிருந்த கட்சியின் தொழிற்சங்க அமைப்புகளை மேலும் பலப்படுத்தியதுடன், அங்கு நடைபெற்ற வெற்றிகரமான தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு சிறப்பான முறையில் தலைமைத்துவமும் வழங்கினார். தொழிலாளர்களின் பிரச்சினைகளின் பொருட்டு தொழில் நீதிமன்றங்களிலும் சிறப்பாக வாதிட்டார்.

அத்துடன் நின்றுவிடாது, அக்காலகட்டத்தில் கட்சியால் வட பகுதியெங்கும் பரந்த அளவிலும் தீவிரமாகவும் முன்னெடுக்கப்பட்ட தீண்டாமைக்கெதிரான போராட்டங்களில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார். விவசாயப் பகுதிகளில் நடைபெற்ற போராட்டங்களிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார். இந்தக் காலகட்டங்களில் சில சந்தர்ப்பங்களில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், அவர்களின் தாக்குதலுக்கும் உள்ளானார். சில சந்தர்ப்பங்களில் தலைமறைவாகவும் வாழ்ந்தார்.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமான பின்னர், தன்னை முற்போக்குத் தேசிய இயக்கங்களுடன் இணைத்துக் கொண்டார். அதன் காரணமாக வலதுசாரி புலிகள் இயக்கத்தால் கைதுசெய்யப்பட்டு பல மாதங்கள் சித்திரவதை செய்யப்பட்டார். அதன் பின்னரும் அவர் பனம் பொருள அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்த காலத்தில், அவர் பயணித்த வாகனத்தில் புலிகள் வைத்த குண்டு வெடித்ததால், பலத்து காயங்களுக்கு உள்ளாகி மயிரிழையில் உயிர் தப்பிப் பிழைத்தார்.

தமிழ் - சிங்களம் - ஆங்கிலம் என மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த தோழர் சிவதாசன், கட்சிப் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் என்பனவற்றில் சிறந்த சமகால மொழிபெயர்ப்பாளராச் செயலாற்றியுள்ளார். சில வருடங்கள் இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியபோது, அங்கும் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றினார்.

இனப்பிரச்சினை கூர்மையடைந்த காலத்தில், ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்துடன் இணைந்து பணியாற்றிய தோழர் சிவதாசன், வட கிழக்கு மாகாணசபையின் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னுடன் இணைந்து பணியாற்றிய தோழர் கதிரவேலு அவர்களின் புதல்வர் டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி.பி கட்சியை உருவாக்கிய போது தன்னை அதனுடன் இணைத்துக் கொண்டார். அக்கட்சியின் சார்பாக இரு தடவைகள் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராகவும் கடமையாற்றி பனை வளம் பெருக உழைத்தார்.

ஆழமான தோழமை உணர்வு காரணமாக, தோழர் கதிரவேலு அவர்களின் சகோதரி முறையானவரையே தனது வாழ்க்கைத் துணைவியாகவும் வரித்துக கொண்டார். சில வருடங்களுக்கு முன்னர் மனைவியையும் இழந்துவிட்ட தோழர் சிவதாசன், பிள்ளைகளும் இல்லாதபடியால், இறுதிக் காலத்தைத் தனது அரசியல் தோழர்களின் துணையுடனேயே யாழ்ப்பாணத்தில் கழித்தார்.

தோழர் சிவதாசன், தான் மரணிக்கும் வரை, தனது அரசியல் வாழ்வின் ஆரம்பத்தில் வரித்துக்கொண்ட இடதுசாரி - முற்போக்குக் கொள்கையையே இறுதிவரை உறுதியுடன் கடைப்பிடித்தார். எப்பொழுதும் கட்சித் தோழர்களுடனும், சுரண்டப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுடனும் நெருக்கமான தொடர்புகளைப பேணி வந்தார். அவரது மறைவு அனைத்து முற்போக்கு சக்திகளுக்கும், உழைக்கும் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத ஒன்றாகும்.



தோழர் சிவதாசன் அவர்களின் மறைவால் வாடும் அவரது உறவினர்களுக்கும், தோழர்களுக்கும் கனடா வாழ் இலங்கைத் தோழர்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தோழர் சிவதாசனுக்கு எமது இறுதி அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கனடா வாழ் தோழர்களின்
சார்பாக,

**சி.தர்மராசன்**
வட பிராந்திய முன்னாள் தலைவர்,
இலங்கை மோட்டார் தொழிலாளர்
(இ.போ.ச) சங்கம்.


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சங்கரப்பிள்ளை சிவதாசன்



கல்லும், முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையில் பயணித்து
உனது அரசியல் சமூக, சமயப்பணிகளைத் தொடர்ந்தாய்
கொடியவர்களின் குண்டுகளுக்கும் பயப்படாது
மீண்டும் எழுந்து மக்கள் சேவையைத் தொடர்ந்தாய்
யுத்த மேகங்கள் கருக்கட்டியிருந்த வேளையிலும்,
கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் அன்று முதன்முதலாக
மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டித்த பக்தர்களை
புனித தீர்த்தக்கரையாம் கீரிமலையில் நீராடவைத்தாய்.
இன்று;
எம்மை எல்லாம் தன்னந்தனியாக விட்டு விட்டு
அந்த நகுலேஸ்வரனைச் சரணடைந்துவிட்டாயே!
உனது இழப்பு தமிழ் மக்களுக்கான ஓர் பேரிழப்பாகும்.
இரு கண்மணிகளில் இருந்து சொரியும் நீரால்
அர்ச்சித்து ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
பணியாளர்கள்
நோர்த் சீ லிமிட்டெட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

(C/1085)

# மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அதிக அக்கறை காட்டினார் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற வடமாகாண வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடமாகாணத்திற்கென 92 வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகள் புனரமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டிய ஆளுநர் குறிப்பாக யுத்தத்தால் சேதமடைந்த கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைகள் உள்ளிட்ட பிரதேச வைத்தியசாலைகளும் தற்போது புனரமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் வடமாகாணத்தில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதில் என்னுடன் இணைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார் எனவும் சென்ற வருடத்தை விட இவ்வருடம் வைத்தியர்களின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் சுகாதார அமைச்சின் வடமாகாண செயலாளர் ரவீந்திரன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பிளவடைந்த...

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் நீடித்த யுத்தம் காரணமாக சமூகத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதுடன் பல்வேறு விடயங்களில் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சமூகம் என்ற ரீதியில் நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது. சுதந்திரத்திற்கு பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட கொள்கைகள் இன சமூகங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு மாறாக பிளவை விரிவுபடுத்தியது சாதாரண சிங்களவர்கள் இனவாதிகள் என இலங்கைக்கு வெளியே கருதப்படுகிறது. உண்மையில் அவ்வாறான ஓர் நிலைமை கிடையாது.தமிழ் சிங்கள தேசியவாதக் கொள்கைகளில் தவறில்லை என்ற போதிலும், கடும்போக்குடைய தேசியவாத கொள்கைகள் பின்பற்றப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது .

அவ்வாறு கடும்போக்குடைய தேசியவாத கொள்கைகள் ஆபத்தாகவே அமையும்.மிதவாத அரசியல் கொள்கைகளை பின்பற்றி வரும் எம்மைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு இரண்டு தரப்பையும் சேர்ந்த கடும்போக்காளர்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.பௌத்த மதம் நடுநிலையான கோட்பாடுகளையே விதந்துரைக்கின்றது.கௌதம புத்தனின் கோட்பாடுகளை பின்பற்றினால் பிளவுகள் ஏற்பட வாய்ப்பு கிடையாது

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் பேணப்பட வேண்டும். பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் ரீதியாக மிக வலுவான உறவுகளைப் பேணுவதற்கு முயற்சிக்கப்பட வேண்டும். ஹொங்கொங் எவ்வாறு சீனாவுடன் மிக நெருங்கிய பொருளாதார உறவுகளைப் பேணி வருகின்றதோ அதேபோன்று இலங்கை இந்தியாவுடன் உறவுகளைப் பேண வேண்டும்.

பெரும்பான்மையான இலங்கையர்கள் இந்தியாவை அச்சுறுத்தலாகக் கருதுகின்றனர். இதேபோன்று இந்தியாவும் இலங்கை விவகாரங்களில் கரிசனை காட்ட வேண்டும்.இந்திய பிரதமர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்து பல வருடங்கள் கடந்துள்ளது. இதுவும் இலங்கையர்களை அதிருப்தியடையச் செய்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில், நாட்டின் அரசியல்வாதிகளுக்கு மிகவும் முக்கியமான பொறுப்பு காணப்படுகின்றது யுத்தத்தினால் ஏற்பட்ட வடுக்களை ஆற்ற வேண்டிய மிக முக்கியமான பொறுப்பு அரசியல்வாதிகளைச் சாரும்.

யுத்தத்தின் பின்னர் நாடு மிக முக்கியமான ஓர் தருணத்தை எட்டியுள்ளது.எதிர்காலத்தை நல்ல நிலைக்கு மாற்றியமைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான அத்திவாரத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அல்லது மற்றுமொரு முரண்பாடு வெடிப்பதற்கான அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## நோர்வேயின்...

அரசும், புலிகள் இயக்கமும் பொறுப்பேற்கவேண்டுமெனக் கடந்த வாரம் நோர்வேயின் அரச சார்பற்ற அமைப்பு ஒன்று தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது. அத்துடன், இது தொடர்பாக பல விமர்சனங்களையும் அது முன்வைத்திருந்தது.

இந்நிலையில், மேற்படி விமர்சனங்கள் இறைமையுள்ள அரசு ஒன்றின் நற்பெயருக்கு சர்வதேச ரீதியில் களங்கத்தை ஏற்படுத்துமென அரசு கருதுவதாக மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். இதனடிப்படையில் இந்த விமர்சனங்கள் குறித்து நோர்வே அரசுக்கும் மேற்படி ஆய்வை நடத்திய நோறாட் அமைப்புக்கும் இராஜதந்திர ரீதியிலான அதிருப்தியை வெளியிட அரசு தீர்மானித்துள்ளது.இன்னும் ஓரிரு தினங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.நோர்வே வெளியிட்ட அறிக்கையில் சமாதான முயற்சியில் இலங்கையின் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் அம்பலமானதால், பெரும் சங்கடமான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துமிந்தவை...

பிரிவினருக்கு அறிவிக்கப்படிருந்த நிலையில் அவர்கள் இன்று அறிக்கையை சமர்பித்து 15 சந்தேகநபர்களை பெயரிட்டனர்.

அதில் எம்.பி துமிந்த சில்வாவின் பெயர் இருக்கவில்லை.

இந்நிலையில் மரண விசாரணை மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் துமிந்த சில்வாவின் பெயர் காணப்படுவதாக நீதிமன்றில் கூறப்பட்ட நிலையில், துமிந்த சில்வாவை சந்தேக நபர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுமாறும் அவரை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## தடை தாண்டும்....

திசாநாயக்க, லலித் அத்துலத் முதலி, ஏ.சி.எஸ். ஹமித், ரணில் விக்கிரமசிங்க போன்றோர் வெளிநாடுகளுக்குச் சென்று உதவிகளையும் நிவாரணங்களையும் அள்ளிக் கொண்டு வந்தனர். இதன் மூலம் நாடு பொருளாதார ரீதியில் நல்ல முன்னேற்றம் கண்டது.

இன்றைய அரசாங்கத்தில் உள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது அமைச்சரவையில் உள்ளவர்களும் நாளாந்தம் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவற்றின் மூலம் நாட்டுக்கு எந்தவித உதவிகளும் கிட்டவில்லை. அவர்கள் உதவி கோருவதற்குப் பதிலாக தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபடுவதற்கான பகீரதப் பிரயத்தனத் தையே மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் காலடியில் மண்டியிட்டுத் தப்புவதற்கான வழிகளையே தேடி வருகின்றனர். குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணையிலிருந்து தப்பமுடியாது என்பதை இவர்கள் நன்குணர்ந்து விட்டனர். நாட்டு மக்களிடம் வீராப்புப் பேசினாலும் உண்மை நிலை வேறாகவே அமைந்துள்ளது. நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுவதை இனி மேல் எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.

அரசாங்கத்தின் கெட்டகாலம் ஆரம்பித்து விட்டது. இனிமேல் அடுத்தடுத்துத் தோல்விகளுக்கு முகம்கொடுக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. நாட்டு மக்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது.

இந்தத் தடை தாண்டும் போட்டிகளில் ஒன்றையேனும் அரசாங்கத்தால் வெற்றி கொள்ள முடியுமா என்பது சந்தேகத்துக் கிடமானதே ஆகும். இனிமேலும் அரசு உண்மைகளை மூடிமறைக்க முற்படக் கூடாது. உண்மையை உலகுக்குச் சொல்லியே ஆக வேண்டும்.

## குடாநாட்டு....

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, குடாநாட்டின் மின் தேவையைப் பூர்த்தி செய்தவற்கு மூன்று வழிகளில் இலங்கை மின்சாரசபை மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கின்றது.

மேலும் தெரிவித்ததாவது, குடாநாட்டின் மின் தேவையைப் பூர்த்தி செய்தவற்கு மூன்று வழிகளில் இலங்கை மின்சார சபை மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கின்றது. ஏற்கனவே மூன்று நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி அக்கிற்ரோ நிறுவனத்திடம் இருந்து 15 மெகாவாற், நொதேன் பவர் நிறுவனத்திடம் இருந்து 30 மெகாவாற், சுன்னாகம் பவஸ் ஸ்ரேசனில் இருந்து 10 மெகாவாற் மின்சாரம் வழங்கப்படுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டிருந்து. எனினும், குறித்த நிறுவனங்களிடம் இருந்து கிடைக்கும் மின்சாரம் குறைவாக இருப்பதன் காரணமாக குடாநாட்டின் முழுமையான மின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

அதாவது அக்கிற்ரோ நிறுவனத்திடம் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி மின்சாரம் கிடைப்பதுடன் நொதேன் பவர் நிறுவனத்திடமிருந்து 30 மெகாவாற்றுக்குப் பதிலாக 18.5 மெகாவாற் மின்சாரமும், சுன்னாகம் பவர் ஸ்ரேசனிடமிருந்து 9.5 மெகா வாற் மின்சாரமுமே கிடைக்கின்றது.

இதன் காரணமாக யாழ்.குடாநாட்டிற்குத் தேவையாகவுள்ள 40 மெகாவாற் மின்சாரத்திற்குப் பதிலாக 29.5 மெகாவாற் மின்சாரமே கிடைக்கின்றது. இதனால் குடாநாட்டின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. எனவே இந்நிலையினைச் சரி செய்யும் முகமாக மேலும் 20 மெகாவாற் மின்சாரத்தை தனியார் நிறுவனங்ளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதுதவிர யாழ். குடாநாட்டிற்கான மின் விநியோகத்தைச் சிறந்த முறையில் மேற்கொள்ளும் முகமாக ஜனவரியில் இருந்து மின்சார சபையின் விநியோகக் கட்டுப்பாட்டு நிலையம் ஐந்து திட்டங்களைச் செயற்படுத்தவுள்ளது.

சுன்னாகம் பவர் ஸ்ரேசனில் இருந்து தனி வழியாக மின்சாரத்தை எடுத்துச் சென்று அச்சுவேலியில் விநியோக மையம் ஒன்றை ஏற்படுத்தி அதில் இருந்து அதனைச் சூழவுள்ள கிராமங்களுக்கும் அதே போன்று சுன்னாகத்தில் இருந்து சாவகச்சேரிக்கும், சுன்னாகத்தில் இருந்து பரமேஸ் வராச் சந்திக்கும், பரமேஸ்வராச் சந்தியில் இருந்து கோம்பயன் மணல் மயானப் பகுதிக்கும், சுன்னாகத்தில் இருந்து வட்டுக்கோட்டைக்கும் மின்சாரத்தை எடுத்துச் சென்று விநியோகத்தை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் குடாநாட்டு மக்கள் சீரான முறையில் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கான வேலைத்திட்டங்கள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

லக்ஷபானா மின்சாரம் 2012 ஆம் ஆண்டு கிளிநொச்சிக்கும் விஸ்தரிக்கும் அங்கிருந்து 2013 இல் யாழ். மாவட்டத்திற்கும் எடுத்து வருவதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.


எதிர்வரும் இரண்டு வருட காலத்தில் யாழ்.குடாநாட்டு மின் தேவை அனைத்தையும் பூர்த்தி செய்ய முடியும் எனவும் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் பிரதேச பொறியியலாளர் எஸ். கனகணேசன், வடமாகாண மனிதவள அதிகாரி ரி.கேதீஸ்வரன் மற்றும் யாழ். மின்சாரசபை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(பா)

## செய்திப்பாணம்

**சமாதானம் தோற்ற சரித்திரம் இன்று நேற்றா**
**அமானுஸ்ய மோசேமுதல் அடங்கலாக - இமாலய**
**முயற்சியாய் பத்துக்கட்டளை முன்வைத்தும் கண்டதாம்**
**பயபக்தி இல்லாத பாடு!**



# வாக்காளர் இடாப்பு திருத்தம் குறித்த கால எல்லையை நீடிக்க வலியுறுத்து

## பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் இடாப்பு திருத்தம் தொடர்பான கால எல்லையை நீடிப்பது தொடர்பில் சட்டத்தில் சரத்துக்கள் இல்லை. இருந்தும் இதனை நீடிப்பது குறித்து தேர்தல் ஆணையாளரிடம் வலியுறுத்துவேன் என பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.மொஹமட் தெரிவித்தார்.



யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் வாக்காளர் இடாப்பு திருத்தம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் வாக்காளர் இடாப்பு திருத்தம் தொடர்பான கால எல்லையை மேலும் 15 நாட்கள் நீடிக்குமாறு பிரதித் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தனர். இதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே தேர்தல் ஆணையாளரினால் நவம்பர் 2 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இதற்கான கால எல்லை வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இக்காலப்பகுதியில் பலர் தமது வாக்காளர் பதிவினை மேற்கொள்ளவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டே இதற்கான கால எல்லையை நீடிக்குமாறு கோரப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் குறித்து சட்டத்தில் சரத்துக்கள் இல்லை. வாக்காளர் இடாப்பு பதிவு தொடர்பில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது யாழ். மாவட்டம் என்பதால் தேர்தல் ஆணையாளரிடம் இவ்விடயம் குறித்து வலியுறுத்துவேன் என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.மொஹமட் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வாக்காளர் பதிவு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்களுக்கும் தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றதனை அவதானிக்க முடிந்தது.

பக்கச்சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன், கிளிநொச்சி உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி, வன்னி உதவித் தேர்தல் ஆணையாளர் சுதாகரன், பவ்ரல் அமைப்பின் இணைப்பாளர் சிறிதரன், பிரதேச சபை தவிசாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (பா)

# பகிடிவதையில் ஈடுபட்டால் மூன்று வருட பல்கலை. தடை

## அமைச்சர் திஸநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பகிடிவதை நடவடிக்கையில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வித்தகைமை நீக்கப்படுவதுடன் சுமார் மூன்று வருட காலத்திற்கு பல்கலைக்கழகத்திற்கு நுழைவதற்கு தடை விதிக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்கள் கடந்த முப்பது வருட காலமாக புலிகளின் கட்டுப்பாட்டிற்குள்ளும், தென்பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்கள் ஜே.வி.பியின் கட்டுப்பாட்டுக்குள்ளும் இருந்ததாகவும், இதன்போது அநாவசிய அரசியல் தலையீடுகள் காணப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், பல்கலைக் கழகங்களில் தற்போது சுமுக நிலை காணப்படுகிறது. பேராதனை மற்றும் றுகுணு பல்கலைக்கழகங்களிலேயே பகிடிவதை அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுகிறது. ஆயினும் தற்போது 99 சதவீதம் பகிடிவதை குறைந்துள்ளது, பகிடிவதையை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# கோப்ரலை சுட்டுக்கொன்ற சிப்பாய்க்கு மரண தண்டனை

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மிஹிந்தலைப் பிரதேசத்தில் வைத்து இராணுவத்தின் கோப்ரல் தரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றார் என்ற குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து படைச் சிப்பாய் ஒருவருக்கு உயர் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தின் ஆறாவது படையணியில் கடமையாற்றிய பிங்கந்த ஆராச்சிலாகே நிமல் என்பவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தான் நீண்ட காலம் இராணுவத்தில் பணியாற்றியவர் என்றும் சேவையின் இறுதிக் காலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல் காரணமாக காயமுற்றதாகவும் மரண தண்டனை விதிக்கப்பட்ட சிப்பாய் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸார் ஒலிப்பெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்து வருவதுடன் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை எச்சரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பொலிஸ் உத்தியோகத்தர்கள் கிராம அலுவலர்களுடன் இணைந்து குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படும் வகையில் மது போதையில் வீதியில் குழப்பம் ஏற்படுத்தாது, வீதியால் செல்லும் பெண்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவது, சந்திக்கு சந்தி மாலை 6 மணிக்கு பின்னர் கூடி நின்று அரட்டை அடிப்பது, பொது இடங்களில் மது பாவனையில் ஈடுபடுவது, அடுத்தவர்களின் நடமாட்டத்திற்கு இடைஞ்சலாக இருப்பது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது உடனடியாக பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்படுமென ஒலிபெருக்கியின் மூலம் பொலிஸார் அறிவித்து வருகின்றனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டாரவினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இணையத்தள பதிவு குறித்து பேச்சு நடத்த தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாட்டில் இயங்கி வரும் இணையத்தளங்கள், பேஸ்புக், வலைப்பதிவுகள் உள்ளிட்ட அனைத்து செய்தி சார் இணைய ஊடகங்களையும் பதிவுக்கு உட்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையர்கள் மற்றும் இலங்கை தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்திகளை பிரசுரம் செய்யும் இணையத்தளங்களை பதிவு செய்வதற்கு ஊடக அமைச்சு தீர்மானித்துள்ளது. ஊடக அமைச்சின் இந்தக் கோரிக்கையில் பல்வேறு குழப்ப நிலைமைகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை சார்பாக வெளிநாடுகளில் இயங்கி வரும் இணையத்தளங்களை எவ்வாறு வகையீடு செய்வது அவற்றை எவ்வாறு பதிவு செய்வது என்பது தொடர்பில் போதிய தெளிவு இல்லை. தொழில்நுட்ப ரீதியாகவும் பல்வேறு குழப்ப நிலைமைகள் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இணையத்தளங்களை பதிவு செய்ய வேண்டியது இன்னமும் சட்டமாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இணையத்தளங்களை பதிவு செய்வது குறித்து, முதல் கட்டமாக அரசாங்கம் வெறுமனே ஓர் கோரிக்கையை மாத்திரம் முன்வைத்துள்ளது.

எதிர்காலத்தில் இந்தக் கோரிக்கை நிபந்தனைகளுடன் கூடிய சட்டமாக அமுல்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புதுடில்லி போட்டி குறைபாடுகளே இலங்கைக்கு வாய்ப்பு நழுவ காரணம்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டு கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இலங்கையின் அம்பாந்தோட்டை நகருக்கு கிடைக்காமல் போனதற்கு, கடந்த ஆண்டு இந்தியாவில் இடம்பெற்ற கொமன வெல்த் போட்டிகளில் இருந்த குறைபாடுகளும் பிரச்சினைகளும் ஒரு காரணமாக இருக்கலாம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் புதுடில்லியில் இடம்பெற்ற கொமன்வெல்த் போட்டிகள் இந்தியாவில் இடம்பெற்ற மிக வெற்றிகரமான போட்டி என்று தங்களுக்கு தெரிந்திருந்தாலும், அந்தப் போட்டிகள் தொடர்பில் எழுந்த சர்ச்சைகள் தமது வாய்ப்புகளை பாதித்திருக்கக் கூடும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தியா இந்தப் போட்டிகளை சரியாக நடத்தவில்லை என்ற ஒரு பிரேரணையை கனடா கொண்டுவந்தது. புதுடில்லிப் போட்டிகள் சிறப்பாக நடத்தப்படவில்லை என்றும், சிலருக்கு இன்னமும் பணம் கொடுக்கப்படவில்லை என்றும் கூறியது.



அதற்கு எதிரான வாதங்களும் வைக்கப்பட்டாலும், அது வாக்களிக்கும் மற்ற நாடுகளிடையே ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தியது என்று தான் கருதுவதாக கப்ரால் கூறியுள்ளார்.

புதுடில்லி போட்டிகள் சரியாக நடத்தப்படவில்லை என்ற வாதத்துக்கு ஆதரவு தெரிவித்த நாடுகள், ஆசிய நாடுகள் சிறப்பானதொரு போட்டிகளை நடத்த முடியாதவர்கள் என்கிற ஒரு எண்ணத்தை ஏற்படுத்தியது என்றும் போட்டிகளை நடத்த விண்ணப்பித்த இலங்கை குழுவின் இணை ஏற்பாட்டாளரான அஜித் நிவாட் கப்ரால் மேலும் கூறியுள்ளார்.

### கைக்குண்டுடன் இருவர் கைது

(வவுனியா)

வவுனியா - செட்டிக்குளம் கந்தசாமி நகர் பகுதியில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது கைக்குண்டுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இவ்விருவரையும் சோதனை செய்த போதே கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபட இவர்கள் கைக்குண்டு எடுத்துச் சென்றதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சந்தேகநபர்கள் வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக செட்டிக்குளம் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# வட, கிழக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறது இராணுவம்

## தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக வடக்கு, கிழக்கு மக்கள் இழந்த கல்வி, மனித உரிமைகளை வழங்க இராணுவம் பாரிய பணிகளை நிறைவேற்றியுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலுக்கு அமைய இராணுவத்தினர் விட்டுக் கொடுப்புடன் ஒழுங்க முறையுடனும் நாட்டு மக்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக புலிகள் பலாத்காரமாக மீறிய சிறுவர் உரிமை மீறல்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. நாட்டின் அனைத்து மக்களும் தற்போது சுதந்திரத்தின் அனுகூலத்தை அனுபவிக்கின்றனர். இந்த நிலையில் நாட்டில் சமாதானம் மலர்ந்தாலும் இராணுவத்தின் பொறுப்பு நிறைவடையவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.